Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-4 16-02-2005 புதன்கிழமை ஓசை -364


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225087
(சி-11251)

## - கிளிநொச்சியிலும், மன்னாரிலும் -

# பல்லாயிரம் மக்கள் திரண்ட மாபெரும் கண்டனப் பேரணிகள்

## மகஜர்களும் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும் மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களினதும் கொலையைக் கண்டித்து நேற்றுக் கிளிநொச்சியிலும் , மன்னாரிலும் மாபெரும் கண்டனப் பேரணிகள் நடைபெற்றன. பேரணிகளின் இறுதியில் பல்வேறு பொது அமைப்புக்களினாலும் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன.**


மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேரு ஆகியோா ரது படுகொலையினை கண்டித்து நேற்றுக் கிளிநொச்சியில் பல்லாயிரம் பேர் திரண்டனர் மாபெரும் கண்டன ஊர்வலமும், கண்டன மகஜர் கையளிப்பு நிகழ்வும் இடம் பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி முருகன் ஆலய முன்றலிலிருந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு வரும் பொருட்களைச் சோதனையிட பணிப்பு

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச நாடுகள் மற்றும் உதவி நிறுவனங்கள் அனுப்பிவைத்த நிவாரணப் பொருட்களில் ஐந்து சதவீதமானவையே சோதனையிடப்பட்டதாக அறிவிக்கப்படடுள்ளது.இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் எடுக்கப்பட வேண்டும்என்றும் குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் கொள்கலன்களை கடுமையான முறையில் சோதனையிடுமாறும் படைத்தரப்பினால் சுங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (32)


கிளி.யில் பேரணி

## மூன்று கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.இல் கூட்டுறவு பொது அமைப்பு ஊர்வலம்

"*நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஆரம்ப நடவடிக்கையாகப் போர் நெருக்குவாரத்திலிருந்து விடுபட்டு இயல்பு வாழ்வுநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்."

* "பேரினவாத கலாச்சாரத்தை சிறிலங்கா அரசியல் தளம் கைவிடுமா என்பது கேள்விக்குரியது. என்ற யதார்த்தத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொண்ட புனர்வாழ்வு- அபிவிருத்தித் திட்டங்களை நேரடியாக வடக்கு-கிழக்குப் பகுதியில் மேற்கொள்ள முன்வர வேண்டும்."

*."தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் ஆர்வலர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும், அச்சுறுத்தல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட தூதுவர் இலங்கை வருகிறார்

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை வருகிறார். இலங்கை வரும் அவர் ஒருவாரம் இங்கு தங்கியிருப்பார் என நோர்வேயின் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் -சந்திரிகா சந்தித்து நீண்டநேரம் பேச்சுவார்த்தை

### - ஜே.வி.பி.யை சந்திக்க மறுப்பு

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்ட நேரம் உரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவக் கூட்டத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரியவருகிறது. இதேவேளை சனாதிபதியின் உரை தொடர்பாக எழுந்துள்ள நிலமைகளை அமைச்சர் மட்டத்தில் சமாளிக்க எடுத்த நடவடிக்கை வெற்றி பெறாத நிலையில் ஜே.வி.பியினர் சனாதிபதியையே சந்திக்க வேண்டும் என அடம்பிடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சனாதிபதி நேரமின்மையைக் காரணம் காட்டி சந்திப்பை தட்டிக்கழித்து வருகின்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் படுகொலையைக் கண்டித்து கொக்கட்டிச்சோலையில் போராட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் உட்பட 6 பேரின் படுகொலையைக் கண்டித்து நேற்று முன்தினமும், நேற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெகுசனப் போராட்டங்கள் நடைபெற்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை மற்றும் போரதீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.நேற்றுக்கொக்கட்டிச்சோலை சந்தியில் அப்பிரதேசத்திலுள்ள அனைத்துக் கிராமங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடி பட்டிப்பளை பிரதேச செயலகத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் இப்படுகொலைக்கான பொறுப்பை சிறிலங்கா அரசு பொறுப்பேற்க வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பன உட்பட வாசக அட்டைகளை ஏந்தியவாறு காணப்பட்டனர். பேரணி முடிவில் பிரதேச

(12ஆம் பக்கம் பார்க்க)


அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களின் குடும்பத்தினரை நேற்றுச் சந்தித்தார்.

## அரச ஆதரவு ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

### -நோர்வே சிறப்புத்தூதுவரிடம் பாலசிங்கம் வலியுறுத்து

சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கப் படையினருடன் இயங்கும் ஆயுதக்குழுகளின் ஆயுதங்களைக் களையவேண்டும். அனர்த்த நிவாரணத்துக்காக வெளிநாடுகள் அளித்துள்ள நிதியை நீதியாகப் பகிர்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இவை இரண்டையும் சிறிலங்கா அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தன்னை சந்தித்த நோர்வே அனுசரணையாளர் குழுவிடம் எடுத்துக்கூறியுள்ளார். கௌசல்யன் படுகொலையைப் அடுத்து சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தம் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமையைப் போக்கும் ஒரு முயற்சியாக நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி லிசா கோல்டன் ஆகியோர் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# 7 ஆம் ஆண்டில் நினைவழியா நினைவுடன்



வீரத்தின் முத்தாய்
1975 - 08 - 28

ஈழத்தின் வித்தாய்
1998 -02 - 16

## மேஜர் கலியுகன்

(அரசியல்துறை)

வேலாயுதம் - அண்ணாத்துரை

கனகராயன்குளம், வவு னியா

சுதந்திர விடிவிற்காய் சுடர்விட்ட புலியவன்
பெருந்தலைவன் அணியில் சேர்ந்து
சிங்களத்தின் சீறிய கொட்டமதை சிதைத்திடவே
வீறு நடை போட்டெழுந்த
வீரப்புலியே - அண்ணா - கலியுகன்
தளராத துணிவோடு போராடி
சரித்திரத்தைப் படைத்திட்ட - எம்
நெஞ்சகலா ஒளி விளக்கே

ஏழாண்டென்ன எழுநூறாண்டு
சென்றாலும்
ஆறிடாது உம் நினைவு
அழிந்திடாது உம் கனவு

உன் நினைவுடன் -அன்புத் தங்கை
போராளி - கலைவிழி / சுகுணா
அன்பு அப்பா, அம்மா
சகோதரர்கள்.

(5691)

# இணுவில் மத்திய கல்லூரியில் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி

(நல்லூர்)

இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இணுவில் கந்தசாமி கோவில் அருகாமையிலுள்ள பவள விழா ஆண்டுமைதானத்தில் நாளைவியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் துரை எங்கரசு தலைமையில் இடம் பெறவுள்ளது. பிரதமவிருந்தினராக வர்த்தகர் து.சிவகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார். (41)

# AAT கற்கைநெறிக்கான நேர்முகத்தேர்வு (தமிழர்புனர் வாழ்வுக் கழகம்)

**மேற்படி கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு 20.02.2005 ஞாயிற்றுக்கிழமை கணினியல் கல்லூரியில் (ஏசியன்கிளிநொச்சி) இடம்பெறவிருப்பதால் விண்ணப்பித்த அனைவரும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

நன்றி

*நிர்வாகம்,*
*முகாமைத்துவக் கல்லூரி,*
*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கிளிநொச்சி.*

(சி.11427)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாணசபை,

**போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)**
**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆஅவ "கடன் இல.2043** - SRI (SF)

## கேள்வி கோரல்-இல.03

**குடிசார் வேலைகளைப் பெறுதல்**

**10.02.2005 ஆம் திகதி ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் பின்வரும் வேலையும் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.**

| | |
|---|---|
| ஒப்பந்த இனங்காட்டல் இல. | VA/CAARP/HS/06 |
| ஒப்பந்தத்தின் பெயர் | பூவரசன்குளம் மத்திய மருந்தகத்தில் மருத்துவ மாது விடுதி நிர்மாணித்தல் |
| ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | M8(கட்டடம்) |
| கூறுவிலைப் பிணைப் பணம்(ரூபா) | 19,000.00 |

*ஏனைய விபரங்களுக்கு 10.02.2005 ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகையினைப் பார்க்கவும்.*

தங்கள் சேவையிலுள்ள,
ம.கிருபாசுதன்,
மாவட்டபிரதித்திட்டப்பணிப்பாளர்,
நிகொட்,வவுனியா

(சி.11340)

# வாடகைக் கார் உரிமையாளர் கழகம்
## வன்னி

## பொதுச் சபைக் கூட்டம்

**வாடகைக் கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 20.02.2005 ஆம் நாள் ஞாயிறு காலை 10.00 மணிக்கு கிளிநொச்சிமத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

நன்றி

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் சென்ற கூட்டஅறிக்கை வாசித்தல்
- கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்
- ஊர்திகளின் பணி தொடர்பாக ஆராய்தல்
- ஏனைய விடயங்கள்
- நன்றி உரை

தகவல்:-
தேவதாஸன் ரூபன்(இராகுலன்)
தலைவர்

கந்தையா நிர்மலன்,
செயலாளர்.

(5689)


# மாபெரும் இயல விற்பனை

**ஹொண்டா, ஹீரோஹொண்டா, யமஹா, சுசுக்கி, பஜாஜ் ஆகிய இனங்களைக் கொண்ட உந்துருளிகள் இயங்கும் நிலை, உதிரிகளாக்கும் நிலையில் விற்பனைக்கு விடப்படும்.**

*பார்வையிடும் நாள் :- 17.02.2005,18-02-2005, 19.02.2005 வரை மட்டும்*


*இயலம் நடைபெறும் நாள் :- 22. 02.2005 காலை 09.மணிக்கு*

*இடம் :- உடைமைப் பகுதி ச் செயலகம், வேணாவில், புதுக்குடியிருப்பு*



*உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200/=*

*உதிரிகளுக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 500/=*



(5690)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# லெபனானில் கார்க்குண்டுத் தாக்குதல்
# முன்னாள் பிரதமர் உட்பட 11 பேர் பலி

## முன்னாள் அமைச்சர்கள் உட்பட 35 பேருக்குக்காயம்

(பெய்ரூட்)

**லெபனான் தலைநகர் பெய்ரூட் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ரபீக்ஹரீரி மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளதோடு முன்னாள் அமைச்சர்கள் உட்பட 35 பேர் காயமடைந்துள்ளனர்.**



ரபீக் ஹரீரி பெய்ரூட் நகரில் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அருகில் நின்ற ஒரு காரில் இருந்து பயங்கரக் குண்டு வெடித்தது. இதில் ரபீக் சென்ற கார், அவரது பாதுகாவலர்கள் சென்ற கார்கள் மற்றும் அருகில் நின்ற கார் வெடித்துச் சிதறின. ஏராளமான கட்டடங்களும் இந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் இடிந்து விழுந்தன. சில கட்டடங்கள், கார்கள் தீப்பிடித்து எரிந்தன. உடல் முழுவதும் ரத்தம் தோய்ந்த நிலையில் கிடந்த முன்னாள் பிரதமர் ரபீக்கை பெய்ரூட் நகரில் உள்ள அமெரிக்க பல்கலைக்கழக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற னர். ஆனால் வழியிலேயே அவர் இறந்து விட்டார். இந்தத் தாக்குதலில் ரபீக்கின் மெய்க்காவலர்கள் உட்பட 11 பேர் பலியானார்கள்.

முன்பு ரபீக் மந்திரி சபையில் இருந்த இரு முன்னாள் மந்திரிகளும இந்த தாக்குதலில் சிக்கினார்கள். அவர்கள் உட்பட 35 பேர்படுகாயத்துடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இந்த கார்க்குண்டுத் தாக்குதலை தொடர்ந்து லெபனான் முழுவதும் பதற்ற நிலை நிலவுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு சிரியா நாடு பின்னணியில் இருப்பதாக ரபீக் ஆதரவாளர் புகார் கூறி இருக்கிறார்கள். குண்டு வெடிப்பில் காயத்துடன் உயிர் தப்பிய முன்னாள் பொருளாதாரத்துறை மந்திரி ஹர்வான் ஹமாதியும் இதில் சிரியாவின் சதி இருப்பதாக தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறி இருக்கிறார். ஆனால் இதில் எங்களுக்கு தொடர்பு இல்லை என்று சிரியா அதிபர் பஷீர் அல் ஆசாத் மறுத்திருக்கிறார்.

இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்கு லெபனானில் உள்ள தீவிரவாத இயக்கம் ஒன்று பொறுப்பு ஏற்று இருக்கிறது.எங்கள் நோக்கம் நிறைவேறி விட்டது என்று அந்த இயக்கம் கூறி இருக்கிறது.

காாக் குண்டுத் தாக்குதலில் முன்னாள் பிரதமர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து லெபனானில் உள்நாட்டு போர் மூளும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்தக் கார்க் குண்டுத் தாக்குதலுக்கு 650 பவுண்டு வெடி மருந்து பயன்படுத்தப்பட்டதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் .குண்டு வெடித்த இடத்தில் 30 அடி ஆழத்துக்குப் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது.



தீவிபத்துக்குள்ளான தெஹ்ரான் பள்ளிவாசல் நுழைவாயிலில் காவலில் இருக்கும் பொலிசார்

# இத்தாலியின் 7 நகரங்களில் பகலில் கார் ஓட்டத் தடை

(ரோம்)

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக இத்தாலியில், பகல்நேரத்தில கார், ஸ்கூட்டர்களை பயன்படுத்த அரசு தடை விதித்துள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது. ஒவ்வொரு நகரிலும் காற்றில் படியும மாசுக்கள் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்கும் எல்லை வகுத்துள்ளது.

இந்த எல்லையை நகரங்கள் தொடும்போது அதைக் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகிறது.

அதன்படி இத்தாலியில் ரோம், மிலான் உட்பட ஏழு நகரங்களில் வாகனப் புகையால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவது ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லையைத் தொட்டுள்ளது. இதனால் இந்த ஏழு நகரங்களிலும் பகல் நேரங்களில் கார், ஸ்கூட்டர்களில் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது. காற்றில் கலந்து இருக்கும் மாசின் அளவைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அளவு குறையும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் விதி முறையின் படிதான் இந்தத் தடையை நடைமுறைப்படுத்தி இருப்பதாக டியூரின் நகர மேயர் செர்ஜியோ சியாம்பரினோ கூறினார். காற்றில் கலந்த மாசு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நான்கு ஆயிரம் இத்தாலியர்கள் மரணம் அடைவதாக கடந்த மாதம் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

# மசூதியில் தீ விபத்து 60 பேர் உடல் கருகிப் பலி

(தெகிரான்)

ஈரானில் மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் அறுவது பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

ஈரான் தலைநகர் தெகிரானில் ஆர்க் மசூதி உள்ளது. ஆஷீரா திருவிழாவையொட்டி இந்த மசூதியில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் கூடி இருந்ததனர் அப்போது அந்த மசூதியில் திடீரென்று தீப்பிடித்துக் கொண்டது. கடும் குளிராக இருந்ததால் அந்த மசூதியில் வெப்பத்துக்காக ஹீற்றர் வைத்திருந்தனர்.

பெண்கள் பகுதியில் இருந்து ஹீற்றரில் பிடித்த தீ மளமள வென்று பரவியது. பெண்கள், குழந்தைகள் உட்பட 60 பேர் இதில் உடல் கருகிப் பலியாகி விட்டனர். 200 இறகும் மேற்பட்டவர்களுக்கு தீக்காயம் ஏற்பட்டது. புகை மூட்டத்தில் சிக்கி ஏராளமானவர்கள் மயங்கி விழுந்தனர்.

# பேச்சில் தன்நிலையை வலுப்படுத்தவே வடகொரியா தன்னிடம் அணுவாயுதம் இருபப்தாகக் கூறுகிறது

## தென்கொரிய அமைச்சர் கூறுகிறார்

(சியோல்)

வடகொரியா தன்னிடம் அணு ஆயுதம் இருப்பதாக ஒப்புக்கொண்டபோதிலும் அதை அணு ஆயுத நாடாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று தென் கொரிய அமைச்சர் சங்டோங்யங் கூறினார்.

வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. வடகொரியாவிடம் அணு ஆயுதம் இருப்பதாக முடிவுக்கு வருவது சரி இல்லை. வடகொரியாவிடம் 10 முதல் 14 கிலோ புளுட்டோனியம் இருப்பது உண்மைதான். ஆனால் அதை புளுட்டோனியம் குண்டுகளாக மாற்றியதற்கு எந்த ஆதாரமும் இல்லை பேச்சுவார்த்தையில் தன் நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காகவே அது அணு ஆயுதம் இருப்பதாக அறிவித்துள்ளது இவ்வாறு மந்திரி சங்டோங்யங் கூறினார்.



இந்தோனேஷியாவின் ஆசே மாநிலத்தில் சுனாமியால் காணாமல் போய் பின்னர் தனது உறவினர்களுடன் போய்ச் சேரும் ஹயாதுன் ருபிஸ் என்ற பெண் (இடது புறம் மகனின் வளர்ப்புத் தந்தை வலதுபுறம் மகன்)

# சுரங்கத்தில் வெடிவிபத்து சீனாவில் 203 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் சுரங்க விபத்துக்கள் நடப்பது ஒரு தொடர் கதையாகி வருகிறது. நேற்று முன்தினம் லியோனிங் மாகாணத்திலுள்ள புக்சின் என்ற இடத்தில் மிகப் பெரிய நிலக்கரிச் சுரங்கத்தில் வெடி விபத்து ஏற்பட்டது. 242 மீற்றர் ஆழத்தில் அந்தச் சுரங்கம் இருந்தது.



இதில் 203 சுரங்கத் தொழிலாளர்கள் பலியானார்கள். 22 பேர் காயத்துடன் தப்பி விட்டனர். இன்னும் 13 பேர் சுரங்கத்தில் சிக்கியுள்ளனர். விஷவாயு தாக்கியதில் அவர்கள் இறந்து விட்டார்களா என்பது பற்றி எந்தத் தகவலும் இல்லை. கடந்த ஆண்டில் மட்டும் சீனாவில் 6000 சுரங்கத் தொழிலாளர்கள் இதுபோன்ற விபத்துக்களில் பலியாகிவிட்டனர்.

# திடீரென நுழைந்த துப்பாக்கிதாரிகள் பொருட்கள் வாங்க வந்தோர் மீது சூடு

## -அமெ. வணிக வளாகத்திற்குள் சம்பவம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் அருகே உள்ள கிங்ஸ்டன் நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்குள் துப்பாக்கி ஏந்திய இருவர் திடீரெனப் புகுந்து பொருட்கள் வாங்குவதற்காக ஒரு கடைக்குள் கூடி இருந்த கூட்டத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதில் ஐந்து பேர் காயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து அந்த வணிக வளாகம் மூடப்பட்டது. பொலிசார் அந்த வளாகத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். துப்பாக்கியால் சுட்டவர்களில் ஒருவர் பொலிசாரிடம் பிடிபட்டார்.


வெலிக்கந்தநாமக்கல் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட போராளிகள் மற்றும் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற கண்டனப் பேரணியைத் தொடர்ந்து மகஜர் கையளிக்கப்படுவதையும் பேரணியில் பங்கேற்ற மக்களில் ஒரு பகுதியினரையும் மல்லாவி பகுதியில் இடம் பெற்ற கண்டனப் பேரணியையும் படங்களில் காண்க. (படங்கள்- எஸ்.தவரட்ணம், அன்ரனி)

# சந்திரிகாவின் மொழியில் பேசுவது புலிகளுக்கு கடினமான ஒன்றல்ல

*–போராளிகள் வீரவணக்க நிகழ்வில் உலகத் தமிழர் இயக்க கனடா பொறுப்பாளர்*

**"விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகாவின் மொழியில் பேசுவது கடினம் ஒன்றும் இல்லை" என்று நினைவு வணக்கக் கூட்டத்தில் உலகத் தமிழர் இயக்க கனடா பொறுப்பாளர் நாவலன் தெரிவித்துள்ளார்.**

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் கௌசல்யன், அவருடன் சென்ற போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு ஆகியோரின் நினைவு வணக்கக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடா ரொரன்ரோவில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் நாவலன் மற்றும் ஊடகவியலாளர், உணர்வாளர்கள் எனப் பலர் உரையாற்றினர். "விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகாவின் மொழியில் பேசுவது கடினம் ஒன்றும் இல்லை. இதனை சந்திரிகா உணர்ந்து கொள்ள வேண்டும்" என அங்கு உரையாற்றிய உலகத்தமிழர் இயக்க கனடாப் பொறுப்பாளர் நாவலன் தெரிவித்தார். "அமைதி என்றால் கௌசல்யன், ஆற்றல் என்றால் கௌசல்யன், பண்பு என்றால் கௌசல்யன், விருந்தோம்பல் என்றால் கௌசல்யன் இப்படியே அவரின் ஆற்றல்களை அடுக்கிச் செல்லாம்"- என நாவலன் அவர்கள் தனதுரையில் மேலும் குறிப்பிட்டார். நிகழ்வில் உதுமான் லெப்பை பேசுகையில்; "இந்திய உபகண்டத்தில் இருந்து முஸ்லிம்களின் நாடாக பாகிஸ்தான் பிரிந்து சென்றது. ஆனால் உருது, வங்காளி ஆகிய இருமொழி பேசும் முஸ்லிம்களால் ஒன்றாக இருக்க முடியவில்லை. வங்கமொழி பேசும் முஸ்லிம்கள் தங்களுக்காக வங்க தேசத்தை அமைத்து பாகிஸ்தானில் இருந்து பிரிந்து சென்றார்கள். அவர்களும் ஒரே அல்லாவை தொழுபவர்கள், ஒரே குர்ஆனை ஓதுபவர்கள், ஐந்துவேளையும் தொழுபவர்கள். இருமொழி பேசுபவர்களாக இருந்தபடியால் ஒன்றாக இருக்க முடியவில்லை. ஆகவே நாங்கள் தமிழ்பேசும் முஸ்லிம்கள். தமிழ் பேசும் இனத்துக்குள் அடங்கக்கூடிய இஸ்லாத்தை ஏற்ற தமிழர்கள். எங்களுடைய பிரச்சினையை சரியாகப் புரிந்து கொண்டவர்களில் கௌசல்யன் முக்கியமானவர்"- என்றார்.

'ஈழமுரசு' ஏட்டின் ஆசிரியர் குழுவைச் சார்ந்த சற்குணராசா, தமிழர் தகவல் ஆசிரியர் சி.திருச்செல்வம், 'முழக்கம்' பொறுப்பாசிரியர் வானதி, உலகத்தமிழர் பத்திரிகையின் ஆசிரியர் கமல், 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் லோகந்திரலிங்கம், 'தமிழன் வழிகாட்டி' நடத்துனர் செந்திலாதன், தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் சு.இராசரத்தினம், திருகோணமலை நலன்புரிச் சங்க தலைவர் ச.குகதாசன், தமிழீழ சங்க இணைப்பாளர் அருமருகன், புனர்நிர்மாண அமைப்பைச் சேர்ந்த முனைவர் சிறி, மருத் துவர் ஜோன் பிகராடோ, 'சிலான் ரைம்ஸ்' ஆசிரியர் றோய், இந்து ஆலய அறங்காவலர் சிவலிங்கம், 'கீதவாணி' வானொலி அதிபர் நடா ஆர்.ராஜ்குமார் ஆகியோர் கூட்டத்தில் கண்ணீர் வணக்க உரை நிகழ்த்தினர். பெருந்திர ளாகக கூடியிருந்த மக்கள் போராளிகளின் திருவுருவப்படங்களிற்கு கண்ணீர் மல்க மலர் வணக்கம் செலுத்தினர் கீதவாணி வானொலி, நிகழ்ச்சியை நேரடி ஒலிபரப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# இடைத்தங்கல் முகாம்களை மேலும் அமைக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே 8 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் பல இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிவித்துள்ளது. இதன்படி 40 ஆம் கட்டையில் இருந்து சுனாமி காரணமாக இடம்பெயர்ந்த மக்களை ஆரையம்பதி பகுதியில் அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாம் களில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதே வேளை மட்டக்களப்பு பூமுச்சி முனை முஸ்லிம் குடும்பங்கள் தமக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வரும் உதவிகள் திருப்தியளிப்பதாக தெரிவித்துள்ளன.

# முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கு உதவி

(ஒட்டுசுட்டான்)

துணுக்காய் வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் வலுவிழந்த ஒட்டுசுட்டான் கோட்ட மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்வி அதிகாரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடி காது கேட்கும் கருவி என்பன வழங்கப்பட்டன

இதே வேளை நேற்று முத்துஜயன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலையில் 2006 ஆண்டில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட 100 மாணவர்களுக்கான பாடக் குறிப்புகளை அச்சடித்து வழங்கியுள்ளனர். (05)

# முல்லைக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது, மாவட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவைகளின் பொதுக் கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ்வகையில் முல்லை மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும், இதில அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி உத்தியோகத்தர்கள், கல்வி ஆர்வலர்கள் மிக அதிக அளவில் பங்கு பற்றவுள்ளனர் எனவும் முல்லை மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவையின் செயலாளரும், துணுக்காய் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான இ.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

# சர்வதேச உதவி அமைப்புக்கள் விசேட திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் உதவிகளை வழங்க முன்வர வேண்டும்

## திருமலையில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பட்டறையில் வலியுறுத்து

சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் கடற்கோளுக்குப் பின்னர் இலங்கையில் நடைமுறைப்படுத்தத் தயாரித்துள்ள பொதுவான நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாண செயல் திட்டம் வடக்கு- கிழக்குக்குப் பொருந்தாது என்றும் இவ் அமைப்புக்கள் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளும் பணிகள் மாவட்டத்தின் இன விகிதாசாரத் தன்மையை குழப்புவதாக அமையக்கூடாது என்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை உப்புவெளியில் அமைந்துள்ள மாகாண சபை விருந்தினர் விடுதியில் நடத்தப்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் பட்டறையில் வலியுறுத்தப்பட்டது.

ஜெர்மன் நாட்டு ஜிரிஇஸற்அமைப்பு திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளுக்குப் பின்னரான பணிகளில் ஈடுபடும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்காக இப் பட்டறையை நடத்தியது.

கடற்கோளுக்குப் பின்னர் ஏற்கனவே செயற்பட்டு வரும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களும் புதிய அமைப்புக்களும், நிறையப் பணத்துடன் திருமலை மாவட்டம் உட்பட வடக்கு கிழக்கில் புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட முன் வந்துள்ளன. இவ் அமைப்புக்களுக்கு விசேடமாக திருகோணமலை மாவட்டத்தின் தரை நிலவரம் பற்றித் தெரியாது. இலங்கையிலேயே புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் திருகோணமலை மாவட்டம் பிரச்சினைக்குரிய பிரதேசம் என்பதை இச் சர்வதேச அமைப்புக்களுக்குத் தெரிய வைப்பதே இப் பட்டறையின் நோக்கம் என்று ஜிரிஇஸற் விசேட ஆலோசகர் வால்டர் கெல்லர் ஆரம்பவுரையில் தெரிவித்தார்.

'தீங்கிழைக்க வேண்டாம்' என்ற தலைப்பில் இப் பட்டறை நடத்தப்பட்டது. வடக்கு -கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா பேசும் போது வடக்கு கிழக்கு மூன்று பாதிப்புக்களைச் சந்தித்துள்ளது. முதலாவது அபிவிருத்தி இழப்பு இரண்டாவது போரினால் ஏற்பட்ட பாதிப்பு, இப்போது கடற்கோளினால் ஏற்பட்ட பேரழிவு இம் மூன்று இழப்புக்களைச் சந்தித்துள்ள வடக்கு -கிழக்கு மாகாணத்திற்கான நிவாரண, புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மாண செயற்றிட்டங்கள் விசேடமாகத் தயாரிக்கப்பட வேண்டும். சர்வதேச அமைப்புக்கள் நாட்டுக்கென பொதுவான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்து அதனை வடக்கு- கிழக்கு மாகாணத்திலும், அமுல் நடத்துவது பொருந்தாது. வடக்கு கிழக்குக்கென விசேட செயற்றிட்டம் தேவை என்று குறிப்பிட்டார்.

சிரான் அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் பேசும் போது, திருகோணமலை மாவட்டத்தில் கடற் கோளுக்குப் பின்னரான நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் மறைமுக அட்டவணையுடன் கொழும்பிலிருந்து சிலசக்திகள் இயங்குகின்றன என்றும் குறிப்பிட்டார். வடக்கு-கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும், பார்க்க திருகோணமலை மாவட்டத்தில் தனியான பிரச்சினைகள் உள்ளன. சர்வதேச அமைப்புக்களின் செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தின் இன ரீதியிலான நிலைப்பாடுகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமையக் கூடாது என்றும் செல்வின் தெரிவித்தார். திருமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயலணிக்கு கொழும்பிலிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அனைத்துத் தரப்பினரும் அங்கம் வகிக்கும் செயலணியின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மை கொண்டதாக இருப்பதை சர்வதேச அமைப்புக்கள் உறுதிப்படுத்த வேண்டும். என்றும் செல்வின் தெரிவித்தார். தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் ஜிரிஇஸற் அதிகாரி டாக்டர் ஸ்ரெபாணி செல் போகன் ஆகி யோரும் பேசினர். (25)

# சமாதான செயற்பாட்டிற்குப் பின்னடைவை ஏற்படுத்தும் தீய சக்திகளிற்குப் பின்னால் அரசு

## -தனியார் போக்குவரத்து சே.சங்க ஒன்றியம் மகஜர்

**வன்னியிலிருந்து மட்டக்களப்பு திரும்பிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.கௌசல்யன் தலைமையிலான போராளிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அரியநாயகம் சந்திரநேரு உட்பட்டோர் சதித்திட்டத்தின் மூலம் படுகொலை செய்யப்பட்டமை அப்பட்ட மான அரசியல் சதிமுயற்சியாகும். இச்சதி முயற்சியையும் படுகொலைச் சம்பவத்தையும் யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்து சேவைச்சங்கங்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.**





நேற்று முன்தினம் ஒன்றியம் நடத்திய பேரணியின் முடிவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கிய மகஜரிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிராயுதபாணிகளான கௌசல்யன் உட்பட்ட நான்கு போராளிகளைப் படுகொலை செய்ததன் மூலம் விடுதலைப்புலிகளையும், தமிழ்த் தேசியத்தையும் வலிந்து போருக்கு இழுக்கும் தீயசக்திகளின் செயற்பாட்டுப் பின்னணியை அரசு கடைப்பிடிக்கின்றதா?.

பேரினவாதம் பேசும் ஜே.வி.பி. கட்சியை பங்காளிகளாக ஏற்றுக் கொண்டு அரசோர்ச்சும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் நிலை தடுமாறும் அரசியல் மூலம் தனது அரச போகத்தை தொடர்வதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப்பிரச்சினைத் தீர்வினை இழுத்தடித்துச் செல்வதை தமிழ் மக்கள் தொடர்ந்து விடுப்புப் பார்ப்பார்களென பேரினவாத அரசு எதிர்பார்க்கின்றதா?

தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு முகத்தையும், பேரினவாத ஜே.வி.பி.யிற்கும் ஏனைய பிற்போக்கு சக்திகளுக்கும் மறுமுகத்தையும் காட்டி ஆட்சிக் கட்டிலை அலங்கரித்துக் கொண்டு காலத்தை இழுத்தடிக்காமல் உறுதியுடனும் நிதானத்துடனும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண அரசுக்கும் சனாதிபதிக்கும் சர்வதேச சமூகம் கால அவகாசத்துடன் கூடிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

சுனாமி அனர்த்தத்தைச் சாட்டாக வைத்து சர்வதேச சமூகத்தின் அனுதாபத்துடன் தனது கபடத்தனத்தின் மூலம் அரச திறைசேரியை நிரப்பும் சனாதிபதியின் ஜாலத்தைச் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாது இருப்பதைத் தவிர்த்து சுனாமியைப் போன்று பன்மடங்கு கொடிய உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் அவர் தம் சுயநிர்ணய உரிமையையும் தமது அரச பயங்கரவாதத்தின் இரும்புக் காலணியால் மிதித்து நிற்கும் சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்காது விரைந்து சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், தமிழ்த் தேசியத்தின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கவும் நடுநிலை பிறளாது செயலாற்றத் தங்களை வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ் மக்களின் பொறுமை சோதிக்கப்படுமானால் தமிழினம் அடிமைப்பட்ட இனமாக சுதந்திரம் இழந்து,சுயநிர்ணய உரிமையிழந்து இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுமானால் அது நிச்சயமாக தமிழர்கள் தமக்கென ஒரு தேசத்தைப் பிரகடனப்படுத்துவதைத் தவிர வேறு ஒன்றுக்கும் வழிவகுக்காது என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது எமது தலையாய கடப்பாடு என்பதையும் வெளிப்படுத்துகின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33,27)

# மழலைகள் ஆங்கில ஊற்று விண்ணப்பம் கோரல்

யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு முன்பள்ளி முதல் ஆண்டு 5 வரையுமான மாணவர்களிற்கு ஆங்கிலத்தில் பேச்சு, எழுத்து வாசிப்புப் பயிற்சியினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக அவுஸ்திரேலியாவிலிருந்து விசேடமாக ஆங்கில ஆசிரியர் சமுகம் தந்துள்ளார். எனவே மேற்குறிப்பிட்ட கல்வித்தரம் கொண்ட மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்விகற்க விரும்பும் மாணவர்கள் தமிழ் மாணவர் ஒன்றியம் இல 155, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (கம்பன் கோட்டம் முன்பாக) எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுஅவ் விண்ணப்பப் படிவத்தினை 17.02.2005 இற்கு முன்னர் நிரப்பி ஒப்படைக்க வேண்டும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் கற்பித்தல்களும் பாடக்குறிப்புக்களும் முற்றிலும் இலவசமானது. (36)

# நீதிமன்று மன்னிப்பு வழங்கியும் இந்.மீனவர் தொடர்ந்து சிறையில்

நீதிமன்றினால் மன்னித்து விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேர் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் ஒரு மாத காலத்திற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை கையளிப்பது தொடர்பாக இருநாட்டுக் கடற்படையினரிற்குமிடையே அக்கறையற்றதோர் சூழல் நிலவி வருவதாலேயே தமது விடுதலை தாமதமாகிறது என மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

காங்கேசன்துறை கடற்பரப்பினுள் ஒரு தொகுதி வெடிமருந்துகளுடன் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இவர்கள் 10 பேரும் இலங்கைக் கடற்படையினரால் கைது செயயப்பட்டிருந்தனர். பின்னர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட இவ் இந்திய மீனவர்கள் நீதவானின் உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தத்தினையடுத்து இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் மீதான வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் விலக்கிக் கொள்வதாக அறிவித்ததையடுத்து மல்லாகம் நீதிமன்று இம் மீனவர்களை விடுவித்திருந்தது.

எனினும் யாழ். சிறைச்சாலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த 10 இந்திய மீனவர்களையும் பொறுப் பேற்று இந்திய கடற்படையினரிடம் கையளிக்கும் பணியினை முன்னெடுக்க வேண்டிய சிறிலங்கா கடற்படை இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எதனையும் எடுக்காததையடுத்தே இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. இதே வேளை குறித்த வெடிமருந்தினை மீன்பிடி நடவடிக்கைகளிற்காகவே எடுத்து வந்திருந்ததாகவும் கைது செய்யப்பட்டிருந்த மீனவர்கள் நீதிமன்றில் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே. (27)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு மேலும் 50 படகுகளை கியூமெடிக்கா விரைவில் வழங்கும்

ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த கியூமெடிக்கா நிறுவனத்தினரால் மேலும 50 மீன்பிடிப்படகுகள் வடமராட்சி வடக்குப் பகுதி மீனவர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு "1000 படகுகளை வழங்குதல்" என்ற கியூமெடிக்கா நிறுவனத்தின் உதவித்திட்டத்தின்கீழ் இவ்வாறு 50 படகுகள் இவ்வார முடிவிற்குள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அந்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி மீனவர்களின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதலை நோக்காகக் கொண்டே இப்படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக ஏற்கனவே 15 மீன்பிடிப்படகுகள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வைபவரீதியாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (33)

# 775ஆம் இலக்க வழிப்பாதையில் சிற்றூர்திச் சேவை இல்லை

(நல்லூர்)

பாதை சீரின்மையினால் 775 ஆம் இலக்க வழிப் பாதையான சுன்னாகம்-புத்தூர்- மட்டுவில் -கனகம்புளியடி பெருங்குளம் ஊடான சிற்றூர்திச் சேவையை நடத்த முடியாத நிலைமை காணப்படுவதாக தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

775 ஆம் இலக்க பாதையில் சேவையில் ஈடுபட்ட தனியார் சிற்றூர்திச் சேவை கடந்தாண்டு இறுதியில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டு இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை

இந் நிலைமை காரணமாக இப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல மைல்கள் நடந்து சென்றே பேருந்து சேவைகளைப் பெறவேண்டிய துர்பாக்கிய நிலைமை கடந்த சில மாதங்களாக ஏற்பட்டு சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இவ்வழிப்பாதை கடந்த கால மழையின்போது மிகவும் மோசமான நிலையில் சேதம் அடைந்து காணப்படுகின்றது. இத்துடன் இவ்வீதியில் உள்ள பாலமும்மோசமான நிலையில பழுதடைந்து எந்த நேரம் என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பிட்ட பாதையை வீதிகள் அபிவிருத்தி திணைக்களமோ அன்றி வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையோ திருத்துவதற்கு எந்த விதமான நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. உரியபாதை திருத்தப்பட்டால் மீண்டும தாம் இவ்வழியில் தனியார் சிற்றூர்திச் சேவையை மக்கள் நன்மை கருதி நடத்தத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.(41)

# "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா எதிர்வரும் சனிக்கிழமை 19 ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசப்தி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியத் தலைவர் S.செல்வகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப்பாராளுமன்ற உறுப்பினர் S.கஜேந்திரன், அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (36)



# ஒவ்வொரு தென்னையிலும் பிடித்தபடி பதினைந்து பேருக்குமேல் நின்றார்கள்

**சுனாமி அலைகள் முல்லைத்தீவை மூழ்கடித்த சமயம் முல்லைத்தீவில் அமைந்திருந்த தனது முகாமில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழீழக் கடற்படை மகளிர் பிரிவுப் போராளி வைதேகி தகவல் அறிந்தவுடன் (சம்பவம் இடம்பெற்ற சில நிமிடங்களில்) வட்டு வாகல் பாலத்தைத் தாண்டி முல்லைத்தீவில் உள்ள தனது முகாமில் இருந்த போராளிகளின் நிலை அறிவதற்காக விரைந்து வந்தார். அப்போது அவர் அனுபவித்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.** •••••••••



அ.லோகீசன்

பகுதி -25

**எனது** முகாம் முல்லைத்தீவில் இருக்கிறது. கடல் கொந்தளித்து முல்லைத்தீவில் பாரிய அழிவுகளை ஏற்படுத்திய சமயம் எங்களது முகாமில் நான் இருக்கவில்லை. வேலை விடயமாக புதுக்குடியிருப்புப் பக்கமாக சென்றிருந்தேன்.

நான் புதுக்குடியிருப்பு பக்கமாக நிற்கின்ற பொழுது எனது தொலைத் தொடர்புக் கருவியில் பெரிய வெள்ளம் வந்திருப்பதாக முகாமில் இருந்து அறிவித்தல் கிடைத்தது. அந்தத் தகவலின் தார்ப்பரியத்தை நான் உடனடியாக புரிந்துகொள்ளவில்லை. ஏதோ வெள்ளம் வந்திருக்கிறது. அது போய்விடும் என்றுதான் நினைத்தேன். நான் அப்படிக் கருத வேண்டி வந்தமைக்கு இப்படியான இயற்கை அனர்த்தங்களை நாங்கள் சந்திக்காதது தான் முக்கியமான காரணமாக இருந்தது.

அப்படி இருந்தாலும் எனது பிள்ளைகள் எங்கள் மக்கள் எல்லோரும் என்ன ஆகியிருப்பார்கள். எனது பிள்ளைகளில் போர்க்களங்களில் எதிரியுடன் போரிட்டு கால் இழந்த போராளிகளும் இருந்தார்கள். வெள்ளம் என்றால் அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை நினைக்க பெரும் பதட்டமாக இருந்தது. அவர்களை நினைத்தபடி மிகவும் வேகமாக வட்டுவாகல் பாலத்தை வந்தடைந்து விட்டேன்.

பாலத்தடிக்கு சென்ற பொழுது போராளிகள், மக்கள், காவல்துறை உறுப்பினர்கள் எனப் பெருமளவானவர்கள் நின்றார்கள். வட்டுவாகல் பாலத்தடிக்குச் சென்ற போது பாலத்தை குறுக்கறுத்துப் பெரிய பனைமரங்கள், சிறியவடலிகள், அலசல்கள் எல்லாம் சேர்ந்து வட்டுவாகல் பாலம் ஒரு புதிய, பயங்கரவடிவத்தில் இருந்தது. அதைப் பார்த்த உடனயுமே வெள்ளப்பெருக்கின் கோரத்தை ஓரளவு புரிந்து கொள்ளக் கூடிய மாதிரி இருந்தது.

இந்த நிலையில் பாலத்துக்குக் கரையில் நிற்பவர்கள் எவரும் முல்லைத்தீவுக்குள் போவதற்கு தயாராக இல்லை. அந்தளவுக்கு பாலத்தின் தோற்றம் பயங்கரமாய் இருந்தது. எப்படியும் நான் எனது பிள்ளைகளிடம் போய்ச்சேரவேண்டும் என்ற துடிப்பில் நின்று தொலைத்தொடர்பு கருவி மூலம் எனது முகாமுக்குத் தொடர்பு கொண்டு பார்த்தேன். தொடர்பில்லை. இதனால் நான் உள்ளே போகவேணும் என்பதில் உறுதியாகிவிட்டேன். நான் தனியாக அந்தப் பயங்கரத்தை தாண்டி உள்ளே போவதற்கு தயாராக அதில் நின்றவர்கள் அனைவரும் ஒரு பெரிய வெள்ளம் வந்து இந்தளவையும் மூடிப்போட்டுது. இன்னும் வரும் அதால நீங்கள் போகவேண்டாம் என்று என்னை மறித்தார்கள். இப்படி இருக்க எங்கள் பிரிவு மகளிர் போராளி ஒருவரும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்.

அந்தப் போராளியும் நானும் சேர்ந்து பாலத்தைக் கடந்து எங்கள் முகாமுக்குப் போவதற்கு இருவரும் புறப்பட்டோம். தடைகள் இருந்தாலும் கடந்து போயிருக்கலாம். ஆனால் பாலத்தில் அலசல்கள் நிறைந்து கிடந்ததால் நாங்கள் தவண்டும், வளைந்தும், நெளிந்தும் தான் போனோம். அந்த இடத்தில் நாங்கள் இப்படியான முடிவை எடுத்தது ஒரு பயங்கரமான சம்பவம். எங்களுடைய அசட்டுத் துணிவு என்பதை பாலத்துக்கிடையில் வந்து கொண்டிருந்த பொழுது தான் சிந்தித்தோம். ஒரு கட்டத்தில் நீரோட்டம் எங்களை இழுத்தது. எனக்கு உதவியாக அந்தப் போராளியும், அவுவாவுக்கு உதவியாக நானும் ஒருவரை ஒருவர் பிடித்துப் பாதுகாப்பாக போய்க் கொண்டிருந்தோம். தண்ணிமட்டம் எனது இடுப்பளவை விட கூடிக்கொண்டிருந்தது.

அப்படியே ஒரு மாதிரி பாலத்தை தாண்டிப்போய் விட்டோம். வெற்றிகரமாக நாங்கள் பாலத்தை தாண்டிய பிறகு இரண்டாவது அலை வந்து பாலத்தில் தண்ணி பெரிசாக. ஏறிவிட்டது.

இப்படியே பாலத்தைத் தாண்டி செல்வபுரப் பக்கம் போய்க்கொண்டிருக்க தண்ணி றோட்டை எல்லாம் மேவி பாஞ்சுகொண்டிருந்தது. நாங்கள் அதுக்குள்ளால மெல்லமெல்லமா அடி எடுத்து வைச்சுப் போய்க்கொண்டிருக்க நீர்மட்டம் கூடி நீரோட்டம் எங்களை மெல்ல மெல்லமா இழுக்கத் தொடங்கீட்டுது. எப்படி நீந்தத் தெரிஞ்சாலும், அந்தக் கஞ்சலுகளுக்குள்ளால நீந்தவே ஏலாது. நீரோட்டம் எங்களை இழுக்க மரத்தில இருந்த ஆக்கள் எல்லாம் சேர்ந்து "கடவுளே தங்கச்சியவ உதுக்குள்ளால வராதேங்கோ அம்மாக்கள் தண்ணி இழுக்குது இப்பிடிக் கனபேர் இழுபட்டுப் போட்டுதுகள் நீங்களும் இழுபட்டுப்போடுவியள்" எண்டு கத்தினார்கள்.

அவர்கள் சொல்வதில் உண்மை இருந்தது. எங்களின் கண்ணுக்கு முன்னாலேயே மோட்டார் சைக்கிள்கள் எல் லாம்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

இழுபட்டுக் கொண்டு போனது. கட்ட டங்கள் எல்லாம் பார்த்துக்கொண்டிருக்க இடிஞ்சு விழுந்தது. ஒரு மாதிரி அதுக்குள்ள இருந்து தப்பீட்டம். வந்த தண்ணி கொஞ்ச நேரத்தில வடிஞ்சு போட்டுது.

தண்ணி வடிஞ்சதப் பயன்படுத்தி நாங்கள் வேகமாய் போய்க்கொண்டிருந்தம். நாங்கள் போய்க்கொண்டிருக்க அதுக்குள்ளால ஆக்கள் அடிபட்டுக்கொண்டு போறத நாங்கள் கண்ணால காணக்கூடியமாதிரி அந்த நேரம் எவரையும் எவரும் காப்பாற்ற ஏலாத நிலை. தண்ணீக்குள்ள அடிபட்டுப் போறவயளப் பாக்க பொறுக்க ஏலாமல் பரிதாபமாக இருந்தது. ஆனால் எங்களால ஒண்டும் செய்ய ஏலாமல் இருந்தது.

இப்படியே கடல் தண்ணி கொஞ்சம் கொஞ்சமாய் வத்திக்கொண்டு போக நாங்கள் பாஞ்சுபாஞ்சு போய்க்கொண்டிருந்தம். கடல் தொடர்ந்து இரைஞ்சுகொண்டே இருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில அந்த இரைச்சல் வானைப் பிளப்பது போல கேட்டது. கடல் பக்கம் திரும்பிப் பாக்க கடல் குமுறி அடித்து வேகமாக வந்து கொண்டிருந்தது. 'உடனயுமே எல்லோரும் மரத்தில ஏறுங்கோ எண்டு கத்தியபடி மரத்தில ஏறத் தெரிந்தவர்கள் எல்லோரும் அகப்பட்ட மரங்களில் ஏறிக்கொண்டிருந்தனர்.

நாங்கள் நின்ற பகுதியில் மரங்கள் குறைவாகத் தான் இருந்தது. அதுக்குள்ளால ஓடி வந்து ஒரு பனை மரத்தைக் கட்டிப் பிடிக்க கடல் வந்து என்னை மூடிக்கொண்டிருந்தது. இதுக்குள்ள என்ர கையில கால் வைச்சு ஆக்கள் எல்லாம் அந்தப் பனைமரத்தில ஏறிக்கொண்டிருந்தனர். அந்த இடத்தில் எவருமே மற்றவர்களைப் பற்றி நினைக்கவே இல்லை. நினைப்பதற்குச் சந்தர்ப்பமும் இல்லை. அந்தளவுக்கு கடலின் மூர்க்கம் இருந்தது.

இந்த நிலையில் எனக்கு ஒரு தடவை மூச்சுத் திணறல் ஏற்பட்டு விட்டது. நான் பனை மரத்தை இறுக்கிப் பிடித்தபடி இருந்தேன். கடல் எனக்கு மேலால் ஏறிவிட்டது. இப்படி இருக்க நான் எனது கைப்பிடியைச் சற்றுத் தளர்த்தினேன். தளர்த்தினது தான் அப்படியே என்னை மேல நோக்கிக் கொண்டு போனது. தண்ணிமட்டம் அதிகரிக்க அதிகரிக்க எங்களை மேல்நோக்கி கொண்டு போனது.

அந்தப்பகுதியில் இருந்த பனை, தென்னை மரங்களில் எல்லாம் குரங்கை குட்டி கட்டிப்பிடிச்சுக்கொண்டிருந்த மாதிரி ஆக்கள் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருந்திச்சினம். கைபிடிக்க இடமில்லாத அளவுக்கு ஆக்கள் ஒவ்வொரு மரத்திலையும் நிறைஞ்சு போய் இருந்திச்சினம். ஒரு கட்டத்தில மேலநோக்கிப் பாத்தன் என்ன ஆச்சசிரியம் அந்தமரத்தில பதினைந்து பேருக்குக் கூட ஆக்கள் கட்டிப் பிடிச்சுக்கொண்டு இருந்தினம். நான் அந்த மரத்தைப்பிடிக்கேக்க ஒருத்தரும் ஏறல்ல ஆனால் இப்ப எப்பிடி இவ்வளவு பேர் ஏறிச்சினம் என்றதே தெரியாமல் இருந்தது.

மூண்டாவதா வந்த வெள்ளம் கனநேரமா வடியேல்ல. அப்படியே இருந்தது. ஒரு கட்டத்தில இந்த வெள்ளமும் வடிந்துகொண்டு இருந்தது. இது வடியிறதைப்பாத்திட்டு மரத்தில இருந்து கீழ இறங்கிட்டம். எங்களிண்ட நெஞ்சுமட்டத்திற்கு கிட்டவா தண்ணி நிண்டது. அதுக்குள்ளால என்ர பிள்ளையளை நினைச்சபடி நடந்து போக வெளிக்கிட்டுட்டம்.

அடுத்த அலையும் வருதோ தெரியாது. அதுக்கிடையில இதில இருந்து அங்கால போவம். எல்லாரும் இறங்கி வாங்கோ எண்டு கேக்க எல்லாரும் தாங்கள் இறங்கி வரமாட்டம். இப்பிடியே நிக்கப்போறம் எண்டு பயத்தில சொன்னார்கள்.

நாங்கள் மரத்தில பிடிச்சுக்கொண்டு இருக்கேக்க ஆக்கள் எல்லாம் தண்ணியில அடிபட்டு தத்தளிச்சுக்கொண்டு போச்சினம். யாரை யாவது காப்பாத்துவம் எண்டால் தண்ணி அதுக்கு இடம் கொடுக்கேல்ல. மனம் பொறுக்க வில்லை. இந்தக் கட்டம் வேதனைக குரிய விசயம். இப்பவும் என்ர மனதில ஆக் கள் தத்தளிச்சிக்கொண்டு போனது அழியா மல் இருக்குது.



மரத்தில இருந்து இறங்கி நடந்து போகேக்குள்ள ஆரையாவது காப்பாற்றலாமோ எண்டு பார்த்தன். ஒருத்தரையும் காணவே இல்லை. எங்க பார்த்தாலும் வீட்டுக்கூரை களும், பத்தைகளும் கஞ்சல்களும் தான். தண்ணீன்ர மேல் மட்டத்தில தெரிஞ்சது. அதுக்குள்ள காப்பாத்தக் கூடிய மாதிரி ஒருத்தருமே இருக்கேல்ல நடந்து போய்க் கொண்டிருந்த நான் திடீர் எண்டு பின்னுக்குத் திரும்பிப்பார்த்தன் தப்பி நிற்கிற மரங்கள் எல்லாத்திலயும் ஆக்கள் ஏறிநின்றார்கள். பனை, தென்னை மரங்கள் எல்லாம் பல மடங்கு பெரிசா தெரிஞ்சுது. தேன் குளவி தன்ர கூட்டில எப்பிடி ஒண்டோட ஒண்டு நெரிபட்டுக் கொண்டிருக்குமோ அதப் போலத் தான் ஆக்கள் ஒருத்தரோட ஒருத்தர் நெரிபட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு மரத்திலும் பதினைந்து பேர் வரையில் நெரிசலாகக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இத்தனைக்கும் பிறகு நாங்கள் முகாமுக்குப் போய்ச் சேர்ந்து விடுவோம் என்ற நம்பிக்கை இல்லாம போய் விட்டது. எனியும் ஒரு அலை வந்தால் நாங்கள் தப்பி இருக்க மாட்டம்.

இப்பிடியே அடிபட்டு ஒருமாதிரி முல்லைத் தீவுக்கு வந்து கொண்டிருக்க கோயில் குடியிருப்பு முகாமில இருந்த ஒருபிள்ளை தண்ணீக்குள்ள அடிபட்டு தப்பி றோட்டில ஏற நானும் போறன் அந்தப்பிள்ளையைக் கண்ட உடன ஓடிப்போய் மற்றப்பிள்ளையள் எப்பிடியம்மா? என்று கேட்டுக் கொண்டு அந்தப் பிள்ளையின் உடம்பைப் பார்த்தேன் உடம்பில் இருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. அதன்பிறகு இந்தப்போராளி கண்டவை என்ன? என்பதை அடுத்த பகுதியில் கடற்படை மகளிர்பிரிவுப் போராளி வைதேகியே கூறுவார்.

தொடரும்


# 07.02.2005-13.02.2005




## 0.7

*. மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பொலிஸ்பிரிவிற்கு உட்பட்ட நாமக்கல் பிள்ளையாரடி என்ற கிராமத்தில் தேச விரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும் படுகாயங்களுக்குள்ளானார்.

*. அரசாங்கத்தின் செயற்பாட்டால் சர்வ தேச உதவிகள் தமிழ் மக்களுக்கு கிடைக்காது போய்விடக் கூடிய அபாயகரமான சூழ்நிலை உள்ளதென யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கு மிடையில் இடம்பெற்ற சந்திப்பில் இளம்பரிதி தெரிவிப்பு.




*. வட-கிழக்கு பிரதேசங்களுக்கான உதவிகள் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படுமென ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஈவன்ஸ், யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் தெரிவிப்பு.

*. அரசும்-புலிகளும் பொது இணக்கப்பாடு ஒன்றிற்கு வரும் பட்சத்தில் வட-கிழக்குப் பகுதிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என சர்வதேச நிதி நிறுவனங்கள் கொழும்பில் ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு.

*. சுனாமியால் சேதமடைந்தமுல்லைத்தீவு மீனவர்களின் படகுகளின் ஒரு தொகுதி திருத்திக் கையளிப்பு.




*.தியாக தீபம் திலீபன் மருத்துவமனை பிரமந்தனாறுப்பகுதியில் திறப்பு.



## 0.8

*. வெலிக்கந்த பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நாமக்கல் பிள்ளையாரடி என்ற இடத்தில் தேசவிரோதிகளின் தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அரியநாயகம் சந்திரநேரு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார்.

*. இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இரு முகாம்களுக்கிடையில் கௌசல்யன் உட்பட போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டமை அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என தமிழர் அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு.



*. மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளிற்காகவும், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவை நினைவு கூர்ந்து வட-கிழக்கு தமிழர் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.



*. பாகிஸ்தானில் உலகவங்கித் தலைவரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஆழிப்பேரலை நிவாரணப்பணி தொடர்பாக பேச்சு நடத்தினர்.

## 09

*. மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட ஏனைய போராளிகளுக்கு மட்டு-அம்பாறை மக்கள்பெருமளவில் திரண்டு அஞ்சலி செலுத்தினர். அத்துடன் கிழக்கில் பூரண கதவடைப்பு.



*. லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளினதும், நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் கொலையைக் கண்டித்து பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சபாநாயகரின் ஆசனத்தின் முன் அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவிப்பு.

*. அரசியல் துறைப்பொறுப்பாளர் உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் கௌசல்யன் உட்பட போராளிகளின் வீர வணக்க நிகழ்வில் கலந்துகொள்ள மட்டக்களப்பிற்கு விஜயம்.



*. மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யனின் கொலையானது கண்டிக்கத்தக்கதென நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு.

*. இஸ்லாமாபாத்தில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து.

## 10

*. படுகொலை செய்யப்பட்ட கௌசல்யன் மற்றும் போராளிகளின் வித்துடல் தாண்டியடி துயிலும் இல்லத்தில் விதைப்பு, இந்நிகழ்வில் போராளிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் பங்கேற்று வீரவணக்கமும் செலுத்தினர்.



*. லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் இறுதி வணக்க நிகழ்வில் வன்னியிலிருந்து 35 போராளிகள் தரைவழியாகச் சென்று கலந்து கொண்டனர்.

*. சமாதானத்தைத் தொடர்ந்தும் காப்பாற்றுவதற்காக விடுதலைப்புலிகள் பெரும் விலைகொடுக்க வேண்டியுள்ள 'தென அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன், கௌசல்யன் மற்றும் போராளிகளின் இறுதி நிகழ்வில் உரையாற்றிய வேளை தெரிவிப்பு.

*. பாகிஸ்தான் சென்றிருந்த சிறிலங்கா சனாதிபதி நாடு திரும்பினார்.

*. இலங்கைக்கு விஜயம் செய்திருந்த துருக்கிப் பிரதமர் நெசெப்டயிப் ஏர்டொகல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசினார்.

*. வட்டுவாகல், செல்வபுரம் இடைத் தங்கல் முகாமில் 87 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

*. தெற்கிலிருந்து சர்வதேச மதக்குழு யாழ். விஜயம்.

## 11.

*. படுகொலை செய்யப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் மற்றும் போராளிகளினதும், நாட்டுப் 'பற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் நினைவுக் கூட்டங்கள் கிளி. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்றன.



*. மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் மாணவர் ஒருவர் பொலிசாரினால் பாலியல் ரீதியான இம்சைகளுக்கு உள்ளாக்கப் பட்டார்.

*. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷியை கொழும்பில் சந்தித்தனர்.

## 12.

*. மன்னாரில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொது மகன் ஒருவர் பலி, இருவர் காயமடைந்தனர்.

*. மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் மற்றும் போராளிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தாலும் வவுனியாவில் மாபெரும் கண்டனப் பேரணியும் இடம்பெற்றது.



*. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி சந்திப்பு. இதன் போது வட-கிழக்கிற்கு உதவியளிக்க ஜப்பான் உறுதியுடன் முன்வரவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.



*. லெப் .கேணல் கௌசல்யனின் படுகொலை சகலருக்கும் அதிர்ச்சி தரக்கூடியதென மட்டக்களப்பில் இடம்பெற்ற சந்திப்பின் பின் அகாஷி செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

* வெலிக்கந்த தாக்குதலில் உயிரிழந்த நாட்டுப் பற்றாளர் அரியநாயகம் சந்திரநேருவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் "மாமனிதர்" விருது வழங்கி கௌரவிப்பு.

* ஹர்த்தாலின் போது கைதடிப் பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்ட மக்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிசாருடன் மோதல். இதன் போது இராணுவ காவலரண்கள் தீ வைப்பு.



*. மாமனிதர் சந்திரநேருவின் புகழுடல் விநாயகபுரம் நாட்டுப் பற்றாளர் சதுக்கத்தில் நல்லடக்கம்.

## 13.

*. மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சந்திப்பு.

*. மாமனிதர் சந்திரநேருவிற்கு கிளியில் அமைந்துள்ள மனிதவுரிமைகள் செயலகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.



* கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் மாமனிதர் சந்திரநேரு ஆகியோரின் நினைவு கூரும் நிகழ்வு அவுஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் இடம்பெற்றது.

# சுனாமி பாதிக்காத இரு மாவட்டங்களுக்கு சிறிலங்கா அரசு பெருமளவு நிதி ஒதுக்கீடு!

## -வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதாம்

(கொழும்பு)

சுனாமி பாதிப்பிற்குள்ளாகாத இரு மாவட்டங்களுக்குச் சிறிலங்கா அரசினால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருப்பதைச் சிறிலங்காவின் தகவல்துறைப் பணிப்பாளர் பியதாஸ வன்மையாக மறுத்துள்ளார்.

அரசாங்கம் சுனாமிப் பாதிப்பிற்குள்ளான பகுதிகளுக்கு நிதி வழங்குவதுடன் பாதிக்காத பகுதிகளுக்கும் நிதியை ஒதுக்குவதுடன் பொலநறுவை, மொனராகல பகுதிகளுக்கும் நிதியொதுக்கியுள்ளது.

இந்த ஒதுக்கீடு பொலநறுவை மாவட்ட எம்.பி யும், நீர்ப்பாசன அமைச்சருமான சிறிசேன, சமூக சேவைகள் பெண்கள் விவகார அமைச்சர் சுமேதஜயசேன ஆகியோரின் கோரிக்கையை அடுத்தே செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுவதுடன் இத்தொகை பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட நிதியை விட அதிகமானதெனவும் தெரியவருகிறது.

அரசின் தகவல்களின் படி பொலநறுவை, மொனராகல ஆகிய மாவட்டங்களுக்கு முறையே 10.2, 10.6 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட கம்பகா மாவட்டத்துக்கு 7 மில்லியன் ரூபா மட்டும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்தவிபரங்கள் ஊடகங்களுக்குச் சென்ற விதம் குறித்து அறிவிக்குமாறு பியதாஸ கேட்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பாக ஊடகத்துறையமைச்சர் விசாரணைக்கு வருமாறு அவரை பணித்திருப்பதாகவும் அவர் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமியால் பாதிப்புற்ற அரச ஊழியர்களுக்கு ஒரு வருட கால சம்பள முற்பணம்

## –விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள ஒரு வருட கால சம்பள முற்பணத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

வட்டியின்றி 60 தவணைகளில் மீளச் செலுத்தக் கூடிய வகையில் இந்தச் சம்பள முற்பணம் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

மேலும் சேதமடைந்த வீட்டுத் தளபாடங்களுக்காக அரச ஊழியர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்கள் கிடைத்தபின்னர் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்களுக்கு சம்பள முற்பணத்தையும், கடன் தொகையையும் வழங்குமாறு அமைச்சர் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

# சுனாமியால் நாடு பாரிய அழிவுகளை சந்தித்தபோது அநுரா 14 நாட்களின் பின்பே நாடு திரும்பினார்!

## –விளக்கமளிக்க சனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இந்த நாட்டில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு நாடு பல அழிவுகளைச் சந்தித்த நிலையில் சிறிலங்காவின் உல்லாசப் பயணத்துறை, மூலதன அபிவிருத்தியமைச்சர் அநுரா பண்டார நாயக்க 14 நாட்கள் காலம் தாழ்த்தி வந்தமைக்கான விளக்கத்தை தருமாறு சனாதிபதி சந்திரிகா கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்.

சனாதிபதி அண்மையில் பாகிஸ்தானுக்குப் பயணமாகுமுன்பு இந்தக் கடிதத்தை அநுராவின் அமைச்சிடம் சமர்ப்பித்துச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவரின் இந்தத் தாமதம் தொடர்பாக சந்திரிகா விசனமடைந்திருப்பதாக சனாதிபதி செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உல்லாசப் பயணத்துறையமைச்சைச் சேர்ந்த கடற்கரையோரங்கள் அனைத்தும் இந்த இயற்கையனர்த்தத்தால் மிகவும் பாதிப்படைந்தது. இதனை அநுரா பண்டாரநாயக்க சுட்டிக்காட்டியதையடுத்து சந்திரிகா அவரது தாமதத்துக்கான விளக்கத்தை இன்னும் 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதற்கான காரணத்தை ஏன் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன கோரவில்லை என்பதற்கான காரணத்தையும் அறிவிக்குமாறு முதலில் அவரிடம் கோரியுள்ளார். எனினும் சிறிசேன இந்த விடயம் தனது அதிகாரத்திற்குட்பட்டதல்ல என்று பதில் அளித்தார். அதனையடுத்தே சந்திரிகா நேரடியாகக் கையெழுத்திட்டு தான் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

எனினும் இதற்குத் தான் பதிலளிக்கப் போவதில்லையெனவும் சந்திரிகா தனது விருப்பப்படி சில விடயங்களை மேற்கொள்வதாகவும், அநுராபண்டாரநாயக்க ஜே.வி.பி பிரச்சார செயலர் விமல் வீரவன்சவிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதுடன் அதன் பிரதியொன்றை சனாதிபதிக்கும் அனுப்பியுள்ளார்.

# வேதன உயர்வை வழங்குவதற்கு போக்குவரத்துச் சபையிடம் பணமில்லை!

## -ஊழியர் போராட்டம் தொடர்கிறது.

(கொழும்பு)

இலங்கையில் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் பல இடங்களிலும் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். அரசாங்கம் கடந்த வரவு செலவுத்திட்டத்தில் வழங்கிய 2000 ரூபா வேதன உயர்வு தமக்கும் வழங்கப்பட வேண்டும் எனக்கோரியே இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது.

இதன் காரணமாக பயணிகள் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இதேவேளை சிறிலங்கா போக்குவரத்துச் சபையில் ஊழியர்களுக்கான வேதன உயர்வைக் கொடுப்பதற்கான 120 மில்லியன் ரூபா இல்லையெனவும் எனவே அதற்கு திறைசேரியே நிதி ஒதுக்கித்தர வேண்டுமெனவும் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது. (32)

### -இத்தாலி நோக்கிப் பயணிக்கும்-

# 150 சட்ட விரோதக் குடியேறிகளை கைது செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

இலங்கையின் சிலாபம் கடல் பகுதியில் இருந்து சுமார் 150 பேர் இத்தாலியை நோக்கி சட்ட விரோதமாக பயணம் செய்வதாக சிறிலங்காப் பொலிசாருக்குக் தகவல் கிடைத்துள்ளது. இதனை அடுத்து அவர்கள் சர்வதேச உதவியை நாடியுள்ளனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் இவர்கள் சிலாபம் பகுதியில் இருந்து புறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிசார் இத்தாலி மற்றும் எகிப்திய பொலிசாரின் உதவியை நாடியுள்ளனர். (32)

# கொழும்பு-சென்னை போக்குவரத்துத் திட்டம் தமிழக முதல்வரின் அழுத்தத்தால் ரத்து!

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அழுத்தத்தை அடுத்து கொழும்புக்கும் சென்னைக்குமிடையில் கப்பல் போக்குவரத்து மேற்கொள்ளும் திட்டத்தை இந்திய அரசு கைவிட்டுள்ளது.

இந்தியக் கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால் அது தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல, நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு பல தடவைகள் அழுத்தம் கொடுத்திருந்தார். அத்துடன் தமிழக அரசு அதிகாரிகள் இத்திட்டம் நிறைவேறக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். இதனால் இத் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது” என்று டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார்.

மும்பையில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், மும்பை-கராச்சி கப்பல் போக்குவரத்துத் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் இது தொடர்பாக மத்தியரசு உரிய கொள்கைகளை உருவாக்கி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனவும் உறுதியளித்துள்ளார். இந்த நிலையில் விரிவான கடல்சார் கொள்கையை இந்தியக் கப்பல்துறை அமைச்சகம் பரிசீலித்து வருகிறது. இது இறுதிக்கட்டத்தை அடைந்ததும் மும்பை-கராச்சி கப்பல் போக்கு வரத்துப்பணிகள் துரிதமாக நடைபெறும் என இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

### ஏழு பொலிசார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் உப சேவையில் பணியாற்றும் ஏழு பொலிசார் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் அவர்கள் கொழும்பில் தனியார் இடம் ஒன்றுக்குள் பிரவேசித்து சேதம் ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# குடியிருப்புக்கள் அமைக்க மலேசியா உதவி

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கும் முயற்சிகளில் மலேசியாவின் மலாக்கா மாநில முதலமைச்சர் முன்வந்துள்ளார். வீடமைப்புத் திட்டங்களை அமுல் செய்வதற்கான காணிப்பற்றாக்குறையை நீக்கும் வகையில் தனியார் காணிகளை கொள்வனவு செய்ய நிதியுதவி வழங்கப்போவதாக முகமட் அலி ரஸ்ரம்சீன்ர உறுதியளித்துள்ளார். ஜனாப் முகமட் அலி தலைமையிலான குழுவொன்று அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அழைப்பை ஏற்று கல்முனைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்தது. இந்த அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டனர்.


# தமிழீழ நுண்கலைக் கல்லூரி முல்லை மாவட்டம் – புதுக்குடியிருப்பு

## புதிய மாணவர்கள் இணைப்பு

முல்லை.மாவட்ட நுண்கலைக்கல்லூரியின் புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரிக்கு 2005 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைக்கவுள்ளோம். கீழ்வரும் கலைப்பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

01.வாய்ப்பாட்டு

02.வயலின்

03.மிருதங்கம்

04.வீணை

5.நடனம்

* 20.02.2005 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும். அதி உச்ச அடைவு மட்டம் வேண்டி மாணவர்கள் நேர்முகத்தேர்வின் பின்பே அனுமதிக்கப்படுவர். படிமுறை அல்லது தரம் 1 இல் ஆகக்குறைந்தது 8 வயதிற்கு மேலே உள்ளவர்களே இணைக்கப்படுவர்.

* வட இலங்கை சங்கீத சபைத் தேர்வின் 4 ஆம் தரம் சித்தி பெற்றோர் நுண்கலைக் கல்லூரியின் 5 ஆம் படிமுறைத் தேர்வில் இருந்து கற்கையைத் தொடரலாம். வ.இ.ச.சபைப் பரீட்சையில் ஆசிரியர் தரம் சித்தி பெற்றோரும், 7 ஆவது படிமுறையான ஆற்றுகைத் திறன் பகுதிக்கும், அவைக் காற்றுத் தேர்வுப் பகுதிக்கும் தோற்றி பயிற்சியை நிறைவு செய்துகொள்ளலாம். இப்பகுதிக்கு தோற்றுவோர் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நேரிலோ, தபால்மூலமோ தகுதிச்சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

16.02.2005
திகதி

சங்கீத பூஷணம் ந.கந்தையா
அதிபர் முல்லை.மாவட்ட நுண்கலைக் கல்லூரி,
புதுக்குடியிருப்பு.

(சி.11319)

# பீகார் ஜார்க்கண்டில் இரண்டாம் கட்டத் தேர்தல்

## பலத்த பாதுகாப்பின் மத்தியிலும் குண்டுகள் வெடித்தன

(புதுடில்லி)

பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில்புலத்த பாது காப்பின் மத்தியில் இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற்ற வேளை நக்சலைட் தீவிரவாதிகள் மூன்று வாக்குச்சாவடிகளில் குண்டுகளை வெடிக்கவைத்தனர்.

பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் மூன்று கட்டமாக சட்டசபைத் தேர்தல் நடக்கிறது. கடந்த 3 ஆம் திகதி நடந்த முதற்கட்டத் தேர்தலில் பீகாரில் 64 தொகுதிகலிலுகும், ஜார்க்கண்டில் 24 தொகுதிகலிலும் வாக்களிப்பு நடந்தது.

இரண்டாவது கட்டத்தேர்தல் நேற்று நடந்தது. பீகார் மாநிலத்தில் 82 தொகுதிகளிலும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் 29 தொகுதிகளிலும், நேற்றுக்காலை 8 மணிக்கு விறுவிறுப்பான வாக்குப் புதிவு தொடங்கியது. ஆண்களும், பெண்களும் காலையிலேயே வாக்குச் சாவடிக்கு வந்து நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

இரு மாநிலங்களிலும் தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் நக்சலைட் தாக்குதல் அபாயம் உள்ளதால் பலத்த பொலிஸ் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய அதிரடிப்படைப் பொலிசார் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

பீகார் மாநிலத்தில் முஷாப்பூர், தார்பங்கா, புருனியா, மாதேபுரா, சகார்சா மாவட்டங்களில் நேற்றுக் காலை விறுவிறுப்பான ஓட்டுப் பதிவு நடந்தது. ஆண்களும், பெண்களும் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாகவே நீண்ட வரிசையில் காத்து நின்று வாக்களித்தனர். சில இடங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பையும் மீறி நக்சலைட்டுக்கள், வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு பல வாக்குச்சாவடிகளில் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தன. இதனால் பதட்டம் ஏற்பட்டது. அங்கு கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முக்கர் தொகுதியில் மட்டும் மூன்று வாக்குச்சாவடிகளில் குண்டு வெடித்தது. இதில் பலியானவர் பற்றிய விபரம் தெரியவில்லை. பீகார் மாநிலத்தில் 82 தொகுதிகளிலும் 1000 திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் லல்லுக்கட்சி சார்பில் 67 பேரும், பா.ஜனதா சார்பில் 31பேரும் , ஐக்கிய ஜனதா தளம் சார்பில் 49பேரும், லோக்சனசக்தி சார்பில் 56பேரும், பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் 78பேரும், சமாஜ் வாதிக்கட்சி சார்பில் 48 பேரும், கம்யூனிஸ்ட்டு சார்பில் 14 பேரும், தேசியவாத காங்கிரஸ் சார்பில் 15 பேரும் போட்டியிடுகிறார்கள்.

### பொலிசாருக்கு பதக்கம்

(சென்னை)

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணிபுரியும் பொலிசாருக்கு தமிழக முதலமைச்சர் பதக்கம் வழங்கி வருகிறார். கடந்த ஆண்டு பதக்கம் வழங்க வேண்டிய விழா திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் பொலிசாருக்குப் பதக்கம் வழங்கும் விழா வருகிற 18 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் அரங்கில் நடை பெறுகிறது. இந்த விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா கலந்துகொண்டு 507 பொலிசாருக்குப் பதக்கம் வழங்கவுள்ளார்.

# பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனை

## மத்திய மந்திரி சபையில் நாளை மாற்றம்

(புதுடில்லி)

மத்திய மந்திரி சபையில் நாளை மாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மத்தியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி மந்திரி சபையில் 68 பேர் மந்திரிகளாக உள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 பேர் மத்திய மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் நாளை மத்திய மந்திரி சபையில் சில மாற்றங்கள் செய்யப்படும் என்று கூறப்படுகின்றது.. மந்திரி சபையில் மாற்றத்தின் போது புதிதாக சில மந்திரிகள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள். தற்போதைய மந்திரிகள் சிலரின் இலாகாக்களிலும், மாற்றம் செய்யப்படுமென்று தெரிகிறது.பீகார், ஜார்க்கண்ட், அரியானா மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வரும் 27ஆம் திகதி வெளியாகும். இந்தத் தேர்தல்களில் காங்கிரஸ் கூடுதல் இடங்களைக் கைப்பற்றும் என்று காங்கிரசார் எதிர்பார்க்கின்றார்கள்.

எனவே இந்தத் தேர்தல் முடிவுக்குப் பிறகு மந்திரி சபையில் மாற்றம் செய்யலாம் என்ற ஒரு கருத்தும் இருந்தது. ஆனால் பாராளுமன்றத்தின் வரவு- செலவுத் திட்டக் கூட்டம் 25ஆம் திகதி தொடங்க இருக்கின்றது. பாராளுமன்றக் கூட்டம் நடைபெறும் நேரத்தில் மந்திரி சபையில் மாற்றம் செய்யக் கூடாது என்ற தடை இல்லாத போதிலும் பொதுவாக பாராளுமன்றக் கூட்டம் நடைபெறும் நேரத்தில் மந்திரி சபை மாற்றி அமைக்கப்படுவது இல்லை. எனவே பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பே மந்திரி சபையில் மாற்றம் செய்யப்படும் என்று கூறப்படுகின்றது.

# இந்தியாவில் முதன்முதலாக

## புகைப்படம் ஒட்டிய வாக்காளர் பட்டியல்

(திருவனந்தபுரம்)

இந்தியாவில் முதன்முதலாக புகைப்படம் பதித்த வாக்காளர் பட்டியல் கேரளாவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அடுத்த தேர்தலுக்கு இந்தப் புகைப்படம் பதித்த வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளது.

இது குறித்து உதவித் தேர்தல் கமிஷனர் ஏ.என்.தச்சா திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-

கேரளாவில் மொத்தமுள்ள இரண்டு கோடியே எட்டு லட்சம் வாக்காளர்களில் 48.3 சதவீதம் வாக்காளர்களின் புகைப்படம் பதித்த வாக்காளர் பட்டியல் கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்டது.

புதிய வாக்காளர் பட்டியல் மாவட்ட கலெக்டர் அலுவலகம், தாலுகா அலுவ லகம், கிராம அலுவலகம் ஆகிய இடங்களில் பரிசோதனைக்குக் கிடைக்கும். வருகிற சட்டசபைத் தேர்தலில் இந்த வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி தேர்தல் நடத்தப்படும்.

2005 சனவரி முதலாம் திகதி வரை 5.86 லட்சம் புதிய வாக்காளர்களை சேர்த்துள்ளனர். மரணம் அடைந்தவர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அரியானாவிலும், வாக்காளர் பட்டியலில் புகைப்படம் ஒட்டும் பணி நடந்து வருகிறது. மற்ற மாநிலங்களிலும் இதேபோல் புகைப்படம் ஒட்டத் தீர்மானித்தாலும், திகதி நிச்சயிக்கப்படவில்லை.

கேரளாவில் வாக்குச் சாவடிகளின் அடிப்படையில் புதிய வாக்காளர் பட்டியல் தயார் செய்துள்ளனர். உள்ளாட்சி துறைகளில் அடுத்ததாக நடைபெறுகின்ற தேர்தலிலும் இந்த வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தலாம் என்றார்.

# தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல்

## காஷ்மீரில் 25 பேர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் இருபத்தைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு காஷ்மீரில் உள்ள சோபியான் பகுதியில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடடிருந்த வேளை அவர்களை நோக்கித் தீவிரவாதிகள் வீசிய குண்டு குறி தவறி மக்கள் நடமாட்டம் மிகுந்த சாலைப் பகுதியில் விழுந்தது. இதில் இராணுவ வீரர் உட்பட 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ச்சியால் போக்குவரத்து ஒரு மணி நேரத்திற்கு மேல் தடைப்பட்டது.

# பிரதமர் மன்மோகன்சிங்குக்கு டாக்டர் பட்டம்

## ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வழங்குகிறது


(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள பிரபல ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 'சிவில் சட்ட' பிரிவில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறது. மன்மோகன் சிங் உட்பட உலகின் பிரபலமான 10 பேர், இந்த ஆண்டு ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம் பெறுகிறார்கள்.

நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் டோனி மோரிசனும் டாக்டர் பட்டம் பெற தேர்வு செய்யப் பட்டவர்களில் ஒருவராவார். பிரதமர் மன்மோகன் சிங் எந்தத் திகதியில் டாக்டர் பட்டம் பெறுவார் என்பது பின்னர் முடிவு செய்யப்படும்.

பொருளாதார மேதையான மன்மோகன் சிங், ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் ஆவார். பஞ்சாப் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழங்களில் படித்தவர், மன்மோகன்சிங், ஒக்ஸ்போர்டில் பொருளாதாரத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

கல்வித்துறையில் பணிபுரிந்த டாக்டர் மன்மோகன்சிங் அரசியல் மற்றும் பொருளாதார துறையில் பல்வேறு பதவிகளை வகித்தவர். நிதி அமைச்சக செயலாளர், ரிசர்வ் வங்கி கவர்னராகவும் அவர் பணிபுரிந்து இருக்கிறார்.



இந்தியா வந்த இத்தாலி அதிபர் கார்லோ அஜேக்லியோ சியாம்பி மற்றும் அவரது துணைவியார் திருமதி.சியாம்பியுடன் சனாதிபதி மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் சனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங் பேசிக்கொண்டிருந்த போது எடுத்த படம்.


யாழ்.பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

இராமநாதன் நுண்கலைக்கழகப் பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்



நுண்கலைமாணி (நடனம்) கற்கை நெறிக்கான முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு செய்முறை மீள் பரீட்சை ADN-1204 17.02.2005 அன்று நடைபெறும்.

துணைவேந்தர்
15.02.2005

(சி.11339)



இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.


கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

## சகலதுறை வீரர் ஜெப்வில்சன் மீண்டும் தேசிய கிரிக்கெட் அணியில்



கடந்த 1993 ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து நீங்கி றக்பிக்குத்தாவிய நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறைவீரர் ஜெப் வில்சன் மீண்டும் தேசிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தனது வேகப்பந்து வீச்சின் மூலம் ரசிகர்களை மகிழ்ச்சிக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியிருக்கிறார். என பயிற்றுநர் ஜோன் பிராஸ்வெல் கூறுகிறார். அவர் நாளை அவுஸ்திரேலியாவுடன் நடைபெறவுள்ள 20 இற்கு 20 போட்டித் தொடரில் பங்கேற்பார். அவர் கடந்த மாதம் மெல்போர்னில் நடைபெற்ற சுனாமி நலநிதி போட்டியில் சிறப்பாக ஆடியதையடுத்து அவருக்கு அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணி சோர்வுடன் நாடு திரும்பியது



இங்கிலாந்து கிரிக்கெட் அணிதென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சோர்வுடன் நாடு திரும்பியுள்ளது. தென்னாபிரிக்காவுடன் ஐந்து டெஸ்ட்போட்டிகளிலும் ஏழு ஒருநாள் போட்டிகளிலும் பங்கு பற்றவென கடந்த டிசம்பரில்அங்கு சென்றது டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றினாலும் ஒருநாள் தொடரை 4-1என்ற ரீதியில் பறிகொடுத்துவிட்டது.

டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்காபோன்ற அணியுடன ஆடி வெற்றிபெற்றது மகிழ்ச்சியைஅளிப்பதாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மார்கஸ்ரெஸ்கொதிக் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பரில் நாட்டைவிட்டு புறப்பட்ட அணி முதலில் நமிபியாவுடனும் அடுத்து சிம்பாப்வே அணியுடனும ஆடி வெற்றிபெற்றது. அடுத்ததாக டிசம்பரில் தென்னாபிரிக்கா சென்றது.

## வேர்ஸ்டசைசஸர் அணியில் சமிந்தவாஸ் ஒப்பந்தம்



அடுத்து ஆரம்பமாகும் இங்கிலாந்து கவுண்டி போட்டிகளில் வேர்ஸ்டசைஸர் அணிக்காக விளையாட சிறிலங்காவின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஒப்பந்தம் செய்துள்ளார்.

முன்னர் பாகிஸ்தானின் சொஹைப் அக்தர் இக் கழகத்துக்காக ஆடினார். அவரின் இடத்துக்கே வாஸ் ஒப்பந்தமாகிறார். 31 வயதான வாஸ் 269 டெஸ்ட் விக்கெட்டுக்களையும், 323 ஒருநாள் விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

இவர் 2003ஆம் ஆண்டில் ஹாம்சயர் அணிக்காக ஆடிய அனுபவம் பெற்றுள்ளார்.

## இந்திய சுற்றுலாவுக்கான பாக்.அணியில் சொஹைப்அக்தர் நிச்சயம் இடம்பெறுவார்



-இன்சமாம்

'இந்திய சுற்றுப் பயணத்துக் கான பாகிஸ்தான் அணியில் சொஹைப் அக்தர் நிச்சயம் இடம் பெறுவார்" என்று அணித்தலைவர் இன்சமாம் கூறியுள்ளார்.

தசைப்பிடிப்புக் காரணமாக அவுஸ்திரேலியப் போட்டியில் இருந்து பாதியில் விலகிய பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் சொஹைப் அக்தர் உடல் தகுதி பெற்று அணியில் இடம் பிடிப்பாரா? என்பது கேள்விக் குறியாகி உள்ளது. இரவு விடுதி விவகாரத்தில் பாகிஸ்தான் சபையின் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ள அக்தர் அணியில் இடம் பிடிப்பதற்கு சகவீரர்கள் எதிர்ப்புத்தெரிவிப்பதாகவும் செய்திகள் வெளியாயின. இந்த நிலையில் விளம்பரப் படம் ஒன்றில் நடிக்க கொல்கத்தா சென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் கூறியதாவது,

சொஹைப் அக்தர் எங்கள் அணியின் முக்கிய பந்து வீச்சாளர் ஆவார். அவுஸ்திரேலியப் பயணத்தில் அவர் நன்றாகப் பந்து வீசினார். அவருக்கு உடல் தகுதியில் லேசான பிரச்சினை இருக்கிறது. அவர் உடல் தகுதி பெற்று விட்டால் இந்திய பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் நிச்சயம் இடம்பெறுவார்.அகமதாபாத் டெஸ்டில் ஆட மறுப்பது பற்றி நான் கருத்துக் கூற முடியாது. இது வீரர்கள் எடுத்த முடிவு அல்ல. சபை இது குறித்துக் கவனித்து வருகிறது. அது வீரர்களின் நலனை மனதில் கொள்ளும் விடயம்.


## இங்கிலாந்தின் நட்சத்திர வீர பீட்டர்சன் ஆஷஸ் தொடரில் விளையாடுவார்



இங்கிலாந்து அணியின் புதிய நட்சத்திர வீரரான கெவின்பீட்டர்சன் ஆஷஸ் தொடரில் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. தென்ஆபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இங்கிலாந்து இழந்த போதும், பீட்டர்சனின் மகத்தான ஆட்டம் அணிக்கு ஆறுதலாக அமைந்தது. இவர் புளோம் போன்டினில் 108 மேற்கு லண்டனில் 100,செஞ்சூரியன் போட்டியில் 116 ஓட்டங்கள் என மூன்று சதங்கள் அடித்து அசத்தினார். ஆறுபோட்டிகளில் 456 ஓட்டங்களைக் குவித்து தொடர்நாயகன் விருதையும் வென்றார்.

## 2012 ஒலிம்பிக்கை நடத்த ரஷ்யா ஆர்வமாயுள்ளது

2012 ஆவது ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது. அதை சாதிக்கும் முயற்சியையும் ரஷ்யா தொடங்கி விட்டது. இந்தத் தகவலை ரஷ்யா தொலைக்காட்சி அந்த நாட்டு நடிகை ஜுலியா மூலம் வெளியிட்டது. அவர் தெரிவிக்கையில்,"இன்று காதலர் தினம் 2012 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்கை நடத்தும் நாடாக ரஷ்யாவை அறிவிக்கும் வரை எங்கள் நாட்டின் காதலர்களாக ஐ.ஓ.சி.உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்" என்றார்.



பரிஸில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 13ஆவது ஓபன் காஸ் டி பிரான்ஸ் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற ரஷ்யாவின் டினாரா சபீனா (வலது). இரண்டாவது இடம் பிடித்த பிரான்ஸ் மங்கை அமெலி மௌரெஸ்மோ.

## பெல்ஜிய வீராங்கனை கிளிஸ்டர்ஸ் மீண்டும் போட்டிக்கு திரும்புகிறார்

உலகின் முன்னாள் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனை கிம்கிளிஸ்டர்ஸ் குணமடைந்தார். உலகின் முன்னாள் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் கை மணிக்கட்டில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்தார். இப்போது முழுவதுமாக குணம் அடைந்துவிட்டார். இந்த வாரம் நடைபெறும் டைமண்ட் போட்டியில் பங்கேற்று விளையாடுகிறார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் அவர் ரஷ்ய வீராங்கனை எலினாவை எதிர்த்து பெல்ஜியத்தில் விளையாடிக் கொண்டு இருந்தபோது காயம் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது அவர் பழைய நிலைக்கு திரும்பி விட்டார்.






பிரான்சின் மார்செலே நகரில் நடந்த சர்வதேச டென்னிஸ் தொடர் இறுதிப் போட்டியில், வெற்றிபெற்ற சுவீடன் வீரர் ஜோகிம் ஜோகன்சன் சம்பியன் பட்டத்துடன்

## 40 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப்போட்டி யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியனானது

அமரர்கள் விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துடுப்பாட்ட அணியினர் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

கடந்த ஞாயிறன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 40 பந்து பரிமாற்றங்களுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துடுப்பாட்ட அணி மோதிக்கொண்டது.

பூவா, தலையா போட்டுப் பார்த்ததில் வெற்றி பெற்ற பல்கலைக்கழக அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தனர். பல்கலைக்கழக அணியினர் 40 பந்து பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களை பெற்றது. பல்கலைக்கழக அணியின் வீரர்கள் சார்பில் ஆகக் கூடிய ஓட்டங்களாக எ.ஜெயந்தன் 43, ஜி.அருள்ராஜ் 32, எ.நிசாந்தன் 24 ஐயும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி வீரர்கள் 31.3 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும்இழந்து 156 ஓட்டங்களைப்பெற்றது. இதில் கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக வீரர்களான சங்கர் 56 ஓட்டங்களையும், துஷா 20 ஓட்டங்களையும் , உமாநாத் 13 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர். யாழ்.பல்கலைக்கழக அணி வீரர் செந்தூரன் தனது முதலாவது பந்து பரிமாற்றத்தின்போது நான்கு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று இலக்குகளை வீழ்த்தி பல்கலைக்கழக அணியின் வெற்றிப் பாதைக்கு வழி சமைத்தமை பாராட்டிற்குரியதாகும். தொடர்ஆட்டநாயகனாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீரன் ஐங்கரனும், ஆட்ட நாயகனாக பல்கலைக்கழக அணிவீரர் செந்தூரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற நில அளவையாளர் சிவானந்தராசா வழங்கிக் கௌரவித்தார். (41)




பாம்லோனாவில் நடந்த ஸ்பானிஸ் லீக் கால்பந்து போட்டியில், ரியல் மாட்ரிட் வீரர் மைக்கேல் ஓவன் (இடமிருந்து 2ஆவது) கோல் அடித்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார். இந்தப் போட்டியில் ரியல் மாட்ரிட் 2–1 என்ற கோல் கணக்கில் ஒகாசுனா அணியை வீழ்த்தியது.

## மான்செஸ்டர் அணிக்கு வெற்றி

முன்னணி கிளப் அணிகள் மோதும் இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால் பந்துத் தொடர் லண்டனில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான போட்டியில மான்செஸ்டர் யுனைஸ்ட்டட், மான்செஸ்டர் சிட்டி அணிகள் மோதின.யுனைஸ்ட்டட் அணியின் 19 வயது வீரர் வெய்ன் ரூனி பிரமாதமாக விளையாடினார். அவரது அபார கோல் உதவியுடன் இந்தப் போட்டியில் 2-0 என்ற கோல் முன்னிலையில் வென்றது யுனைஸ்ட்டட் இந்த வெற்றி மூலம் 9 புள்ளிகளுடன் இங்கிலீஷ் பிரிமியர் லீக் தொடரில் இரண்டாவது இடம் வகிக்கிறது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் பதிவு செய்க

சுனாமியால் பாதிப்பிற்குள்ளான விளையாட்டு வீரர்களை மாவட்ட விளையாட்டு அதிகாரியுடனோ அல்லது பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களுடனோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் கேட்டுள்ளார். (08)



## சிந்தனைக்கு

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-02-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com


## சந்திரிகா விடுத்த சவால்!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி யினரை இவ்வளவு துச்சமாகத் தூக்கி எறியும் வகையில் பேசுவார் என எவருமே எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லைத்தான். ஆனால், படிப்படியாக ஜே.வி.பி யினரை தூக்கியெறியும் ஒரு நிலைக்கு சந்திரிகா குமாரதுங்க வந்துகொண்டிருக்கிறார் என்பது ஏற்கனவே வெளிப்படத் தொடங்கியதொன்றுதான்.

ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பல தடவை முயன்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரைச் சந்திக்காமையும், சோமவன்ச நாட்டைவிட்டு வெளியேறியமையும் அரச ஊடகங்களில் ஜே.வி.பி யினரின் பிரச்சாரங்களுக்கு தடை விதித்துள்ளமையும் தெற்கில் இடம்பெறும் சுனாமி அனர்த்த அரச நிவாரணப் பணிகளில் ஜே.வி.பி யை அவர் புறக்கணிக்க முற்பட்டமையும் இத்தகையதொரு முடிவிற்குச் சனாதிபதி சந்திரிகா வரக்கூடும் என்ற சமிக்ஞைகளை வெளிப்படுத்தியவையே.

ஆயினும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசாங்கத்தைக் காத்துக் கொள்வதற்கான எந்தவித ஏற்பாடுகளையும் வெளிப்படையாக செய்துகொள்ளாத நிலையிலும் இத்தகைய முடிவுக்கு வந்தமை சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யின் நடவடிக்கைகளினால் பொறுமையை இழந்துவிட்டாரா? அன்றி தனது பதவிக் காலத்தைத் தக்கவைக்க ஜே.வி.பி அவசியம் இல்லை. அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய தேவை தனக்கு இல்லை என்ற முடிவிற்கு வந்துவிட்டாரா என்பது தெரியவில்லை.

ஆனால், நிச்சயமாக சனாதிபதி சந்திரிகாவின் இவ்அறிவிப்பு ஜே.வி.பி யினர் எதிர்பாராத வேளையில் வந்துள்ளது என்பது மட்டும் வெளிப்படையானது. ஏனெனில், சனாதிபதியின் அறிவிப்பு வெளியாகி சுமார் 48 மணி நேரம் – இரண்டு நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் ஜே.வி.பி யினர் தமது அடுத்த கட்ட நடவடிக்கையை அறிவிக்காதது மட்டுமல்ல, அது குறித்துக் கருத்து எதையும் கூறமுடியாது உறைந்து போயுள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு முடிவிற்கு வந்தமைக்கு ஒரு தரப்பினர் அவர் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தயாராகிவிட்டமையே காரணம் என அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். அதற்கு முன்னதாகச் சுனாமி உதவி நிதியைப் பங்கீடு செய்வதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் அவர் கணிசமான அளவில் முன்னேற்றம் காட்டலாம் எனவும் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆனால், சுனாமி நிதியை உரிய முறையில் பங்கிடக்கூடிய அமைப்பொன்றை உருவாக்க சனாதிபதி சந்திரிகாவிற்கு அவரது கட்சிக்குள்ளேயே போதிய ஆதரவு கிடைக்கப்பெறமாட்டாதெனவும், ஆகையினால் அவர் அவ்விடயத்தை அடிப்படையாகக் கொண்டு ஜே.வி.பி யைத் தூக்கியெறிய முற்பட்டிருக்கமாட்டார் எனவும் மற்றொரு தரப்பினர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இதேவேளை அனேகர், ஜே.வி.பி யினர் சனாதிபதியையும், அவரது கௌரவத்தையும் சீண்டும் வகையிலும் நடந்து கொண்டதாகவும், அவரை சிறுபிள்ளைபோல் நடத்த முற்பட்டனர் என்றும், இவை சந்திரிகா குமாரதுங்கவின் இயல்பான குணநலனுக்கே மாறானதென்ற நிலையில், அவர் ஆத்திரமடைந்து ஜே.வி.பி யை ஓரம்தள்ள முற்பட்டார் எனவும் கூறுகின்றனர்.

இவை தவிர சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் குறித்தே சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு முடிவிற்கு வந்துள்ளதாகவே அரசியல் விமர்சகர்கள் இடையில் பலமானதொரு அபிப்பிராயம் உள்ளது. அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான் எதிர்பார்த்தது போன்று அரசியல் யாப்பில் மாற்றமோ அன்றி திருத்தமோ செய்ய முடியாதென்பதை உணர்ந்து கொண்டுள்ளார் எனவும் இதனால், எதிர்கால அரசியலில் தான் செயற்பட முடியாத நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி இணைந்து இருக்குமானால் ஜே.வி.பி சுதந்திரக் கட்சியைச் சிதைத்துவிடும் என அவர் கருதி இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம் என்கின்றனர்.

ஆகையினால்தான், அதிகாரத்தில் இருக்கும்போதே ஜே.வி.பி யை ஓரம்கட்டி வலுவிழக்கச் செய்துவிடுவதே சந்திரிகாவின் நோக்கம் எனக் கருதப்படுகின்றது. அதாவது, சுதந்திரக் கட்சியில் ஐ.தே.கட்சிக்குத் தாக்குபிடிக்க முடியும் எனக் கருதும் சந்திரிகா ஜே.வி.பி யுடன் தாக்குப்பிடிக்க முடியாது எனக் கருதியிருத்தல் கூடும்.

ஆனால், காரணம் எதுவாகிலும் சனாதிபதி சந்திரிகா சவால் நிறைந்த முடிவொன்றை எடுத்துள்ளார் எனின் அது மிகையாகது. ஆனால், இது போன்று நாடு எதிர்நோக்கியிருக்கும் சுனாமி அனர்த்த மீள்கட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்றவற்றில் சவால் நிறைந்த முடிவை சனாதிபதி சந்திரிகா எடுப்பாரேயானால் அதுவே அவர் இரண்டு சனாதிபதிப் பதவிக் காலத்தில் ஆட்சித்தலைவராக இருந்தமைக்காக நாட்டிற்குச் செய்த பெரும் சேவையாக இருக்கும்? செய்வாரா?

# சர்வதேச நியமங்களை அரசு உதாசீனம் செய்வது சமாதானத்தை சாகடித்து விடுமென அஞ்கிறோம்

## –கிளி.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

(அலுவலக செய்தியாளர்)

ஒரு அரச இறையாண்மைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இடம் பெற்றுவரும் படுகொலைகளுக்கு அவ்அரசே பொறுப்பேற்கவேண்டும் என்கிற சர்வதேச நியமத்தை அரசு உதாசீனப்படுத்தி வருவது சமாதானத்தின் தோற்று வாயைச் சாகடித்து விடுமென அஞ்சுகிறோம் எனப் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மனுவின் விபரம் வருமாறு;

கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாங்கள், அண்மையில் கிழக்கிலங்கையில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்துத் தங்களுக்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக இன்று இம்மாவட்டத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் ஒன்று சேர்ந்து சனநாயக வழிமுறையிலான அரச எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை கிளிநொச்சியில் நடாத்தி அம்மக்களின் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாட்டை இம்மனுவினூடாகக் தங்களின் மேலான கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறோம்.

கடந்த 03 ஆண்[illegible] நடைமுறையில் இருக்கும் சமாதான வழிமுறைக்காலத்தில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக கடந்த 07.02.2005 இல் வெலிகந்த அரச பாதுகாப்புப் பிரதேசத்தில் வைத்து கௌசலயன உள்ளிட்ட தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் திட்டமிடப்பட்ட சதிமுயற்சியினால் படுகொலை செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னான போர் ஓய்வு காலங்களிலும், போர் நிறுத்த ஒப்பந்த விதிகளை மீறி இவ்வாறான படுகொலைச் சம்பவங்களும், யுத்த நிறுத்த மீறல்களும், சமாதான விரோதிகளால் நடைபெற்றிருந்த போதும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சம பங்காளியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அரசு, எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காததையிட்டு நாம் பலத்த ஏமாற்றமும், விசனமும் அடைந்திருக்கின்றோம். இவ்வாறு தொடர்ந்து ஒரு அரச இறையாண்மைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு அவ்வரசே பொறுப்பேற்க வேண்டும் என்கின்ற சர்வதேச நியமத்தை தாங்கள் அறிவீர்கள். எனினும் இவ்விடயத்தை அரசு புறந்தள்ளி உதாசீனப் படுத்தி விடுவது என்பது தமிழர் தரப்பினர் சமாதானத்தின் தோற்று வாயைச் சாகடித்துவிடும். என அஞ்சுகின்றோம்.

"சுனாமி" பேரழிவினால் இலங்கையில், வடகிழக்குத் தமிழர் தாயக பிரதேசமும் பெருத்த அழிவுகளை சந்தித்தபோது, அரசு மனிதாபிமான ரீதியிலேனும் எமது பிரச்சினைகளை அணுகாமல் மாற்றான் தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்கின்ற இச்சந்தர்ப்பத்தில், மேலும் எமது மக்களின் எதிர்கால வாழ்வியல் கனவுகளை சிதறடிக்கும் கபட நோக்கமாகவே இவ்வாறான திட்டமிடப்பட்ட படுகொலைகளுக்கு திரைமறைவில் அரசு உடந்தையாகவே இருப்பதாக நாம உணர்கின்றோம்.

நடைபெற்று முடிந்த படுகொலைகளுக்குத் தாங்களும், சர்வதேசமும் உள்ளடங்கலாக நேர்மையான காலந்தாழ்த்தாது அதேவேளை காலம் கடத்தாத நீதி விசாரணை நடைபெற வேண்டுவதோடு, சமாதான வழிமுறைகள் முறிவடைந்துவிடாத நிலையில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பொறுமைகாத்துக் கொண்டு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்அரசியல் பணியில் ஈடுபடுகின்ற நிராயுத பாணிகளான போராளிகளினதும், மற்றும் பொது மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய ஒப்பந்தத்தின் பாற்ப்பட்ட கடமையை நீங்கள் மேலும சிறப்பாக்க தங்கள் பணி தொடர வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். உலக பொது அரசாகிய ஐக்கிய நாடுகள் சபையினுடைய இன உரிமை தொடர்பான பரிந்துரைகளையும் நியமங்களையும் ஏற்றுள்ள இனம் என்ற வகையில் எமது உணர்வுகளைச் சாதகமான முறை யில் பரிசீலிப்பீர்கள் என நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சோ.கு)

# சனாதிபதி வரத் தாமதமாகியதால் ஜாதிக ஹெல உறுமய சந்திப்பை ரத்துச் செய்தது

சனாதிபதியின் தாமதம் காரணமாக நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லை என ஜாதிக ஹெலஉறுமய தெரிவிக்கின்றது. சனாதிபதிக்கும், ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை 3-30 மணிக்கு சனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. சனாதிபதியின் அழைப்பின் பேரில்அங்கு சென்றிருந்த ஹெல உறுமய உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு சனாதிபதி செல்ல தாமதமானதால் சந்திப்பை ரத்துச் செய்து விட்டு ஹெல உறுமயவின் பௌத்தகுருமார்கள் சனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறியுள்ளனர். பாராளு மன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் சனாதிபதிக்கு நேரத்திற்கு வேலை செய்ய முடியாது என்பது சாதாரணமாக அனைவரும் அறிந்த ஒரு குறைபாடுதான் அதனை அவராலும் திருத்திக் கொள்ள முடியவில்லை. அவரின் அழைப்பை ஏற்றே நாம் அங்கு சென்றோம். அழைப்பிற்கு நன்றிகூறுகிறோம். சந்திக்க முடியாமைக்கு வேதனைப் படுகிறோம். எமக்கு நேரத்தை வீணடிக்க முடியாததனால் சந்திப்பை ரத்துச் செய்து விட்டு வந்து விட்டோம். எனத் தெரிவித்தார். (32)

# கனடாவிலிருந்து உண்டியல் பணம் கிடைத்ததாகக் கூறி 5 இலட்சம் மோசடிக்கு முயற்சி

கனடாவிலிருந்து உண்டியலில் பணம் அனுப்பியதாகத் தெரிவித்து போலியாக உள்ளூரில் உள்ள உண்டியல்முகவர் ஒருவருக்கு தொலைநகல் அனுப்பி 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு இளைஞர்களை எதிர் வரும் 22 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன உத்தரவிட்டுள்ளார்.

கனடாவிலுள்ள ஒருவர் 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தை வவுனியாவிலுள்ள ஒருவருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அவருடைய பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை உள்ளடக்கிய தொலைநகல் ஒன்றை வவுனியாவிலிருந்தே வவுனியாவிலுள்ள உண்டியல் முகவர் ஒருவருக்கு அனுப்பிவிட்டு, கனடாவிலிருந்து தமக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதனைத் தருமாறு கோரிய இரண்டு இளைஞர்கள் மீது சந்தேகம் கொண்ட உண்டியல் முகவர் ஒருவர் கொடுத்த தகவலையடுத்து வவுனியாவிலுள்ள மோசடிப் பிரிவுப் பொலிசார் இளைஞர்கள் இருவரையும் கைது செய்தனர். கனடாவிலிருந்து பணம் அனுப்பப்பட்டதாகவோ அல்லது பணம் அனுப்பிவைக்கப் படுவதாகவோ தகவல் எதுவும் தமக்குக் கிடைக்காத நிலையில் தொலைநகல் தகவல் மட்டும் வந்த உடனேயே பணத்தைப் பெற்றுச் செல்வதற்காக வந்த இளைஞர்கள் மீது தமக்கு சந்தேகம் எழுந்ததனாலேயேதான் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததாகக் குறிப்பிட்ட உண்டியல் முகவர் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பாக இவர்களை விசாரணை செய்த போது கனடாவிலிருந்து அனுப்பியதைப் போன்று போலியாக வவுனியாவிலிருந்தே தொலைநகல் அனுப்பி வைக்கப்பட்ட விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாகவும் பொலிசார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்களை விசேட பாதுகாப்பில் வைக்குமாறு அநுராதபுரத்திலுள்ள சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ள வவுனியா மாவட்ட நீதிபதி, கடந்த வாரம் இடம்பெற்ற 50 ஆயிரம் ரூபா பண மோசடிச் சம்பவத்துடன் இவர்களுக்கு சம்பந்தம் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவாரம், பூந்தோட்டத்தில் உள்ள குடும்பப் பெண் ஒருவரிடம், லண்டனிலுள்ள அவருடைய மகன் தனக்கு 50 ஆயிரம் கொடுக்குமாறு தெரிவித்து தகவல் அனுப்பியுள்ளதாகவும், அந்தப் பணத்தை வவுனியாவிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தன்னிடம் கொண்டு வந்து கொடுக்குமாறு தெரிவித்து இளைஞன் ஒருவன் 50 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணத்தைக் கொடுத்ததன் பின்னர், அன்று மாலை லண்டனிலுள்ள தனது மகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோதே, அவ்வாறு எவருக்கும் பணம் கொடுக்கச் சொல்லி தனது மகன் சொல்லவில்லை என்ற உண்மை அந்தத் தாயாருக்குத் தெரியவந்துள்ளது.





கிளி.யில் பேரணியும், மகஜர் கையளிப்பும்



யாழ். இல் மகஜர் கையளிப்பு

# ஐ.ம. சுதந்திர முன்னணியிலிருந்து விலகும் எண்ணம் தற்போதைக்கில்லை

## ஜே.வி.பி.பா.உ..இராமலிங்கம் சந்திரசேகரன்

(லண்டன்)

மக்கள் விடுதலை முன்னணி தற்போதைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவரான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் கூட்டணிக் கட்சிகள் அரசுடன் ஒத்துழைக்க முடியா விட்டால் அரசில் இருந்து விலகலாமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஞாயிற்றுக் கிழமை கூறியதை அடுத்து பி.பி. ஸியின் தமிழோசை இது தொடர்பாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திர சேகரனிடம் செவ்வி கண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அண்மையில் நிட்டம்புவவில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவ்வாறு கூறினார் அதிலும் ஜேவிபியைப் பற்றித்தான் கூறி இருக்கிறார். என்று ஊகங்கள் தான் தெரிவிக்கின்றதே ஒழிய ஜே.வி.பிக்குத தான் கூறுகிறாரா, இல்லையா என்பதை தெட்டத்தெளிவாகக் கூறவில்லை.

ஆனால் சனாதிபதி செயலகத்தில் இருந்து எங்களுக்கு அனுப்பப் பட்ட கடிதத்தில் தாங்கள் அவ்வாறு பேசவில்லை எனவும்' தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றும் அவர் கூறினர்

### அரச...

சுமார் மூன்று மணிநேரமாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறுகையில் - "அமைதிப்பேச்சுக்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க சிறிலங்கா அரசு இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் உதவிசெய்ய வேண்டிய தேவையுள்ளது. ஒன்று: சிறிலங்கா இராணுவத்துடன் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப் பட வேண்டும் அல்லது அவர்களை சிறிலங்கா படைப் பிரிவுகளுக்குள் உள்வாங்கி வடக்கு கிழக்குக்கு வெளியே நிறுத்தப்படவேண்டும். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப் படவேண்டும்." என்று வலியுறுத்தினார். புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட அவரது குழுவினர் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப்புலிகளின் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார். அமைதிப்பேச்சுக்களுக்கான சூழ்நிலைக்குரிய இரண்டாவது வழிமுறை குறித்து பாலா விளக்கமளிக்கையில் "ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்பு புனர் நிர்மாண வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வெளி நாடுகள் வழங்கிய நிதியை நீதியாகப் பகிர்வதற்கு புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை சிறிலங்கா அரசு விரைவாக உருவாக்கவேண்டும். இது விடயத்தில் தற்போது தொடரும் இழுபறி முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்."- என்றார். "அமைதிப்பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளுவதாக எமக்கு தெரியவில்லை"- என்றும் அவர் கூறினார்.

### போராளிகள்...

செயலாளரிடம் இது தொடர்பான மனுவொன்று சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளிக்கப்பட்டது.

### ரணில்...

போதும் எதிர்கட்சித் தலைவருடன் நீண்ட நேர உரையாடலுக்கு நேரம் ஒதுக்கியிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நோர்வே...

கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ள அவர் கொழும்பிலும், வடக்கு கிழக்கிலும் அனைத்து அரசியல் முக்கியஸ்தர்களைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

### மூன்று...

களும் உடன் நிறுத்தப்படவேண்டும்"

எனும் மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து யாழ்மாவட்ட கூட்டுறவு அமைப்புகள், மகளிர் அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து கண்ட னப் பேரணியொன்றை நேற்றுக் காலை நடாத்தியுள்ளன.

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியிலிருந்து காலை 11 மணிக்குப் புறப்பட்ட இவ் ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்-பருத்தித்துறை வீதி, நல்லூர் குறுக்கு வீதி நாவலர் வீதியூடாக கைலாயப்பிள்ளை கோயில் சந்தியைச் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து கோவில் வீதி வழியே சென்று நல்லூரிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ் அலுவலகத்தினில் முடிவுற்றது.

பேரணியின் முடிவினில் தமதுபேரணியின் நோக்கம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறிய ஏற்பாட்டாளர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்தனர்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக்களின் ஒன்றியம், பெண்கள் பண்பாட்டு மையம், சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களினது சம்மேளனம் என வேறு பல கூட்டுறவு அமைப்புக்களும் அதேகோரிக்கைகளை வலியுறுத்தி மகஜர்களை கண்காணிப்புக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்திருந்தனர்.

இக் கண்டனப் பேரணியில் குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து [illegible]ாண்டிருந்தனர். முடிவில் அங்கிருந்து வாகன ஊர்வலம் யாழ்.செய[illegible]கத்தில் அரச அதிபரிடமும் மகஜரினை ஏற்பாட்டாளர்கள் கையளித்தனர். (27, 41)

### பல்லாயிரம்...

தும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டப முன்றலிலிருந்தும் இரு முனைகளில் ஒரே நேரத்தில் கண்டனப் பேரணிகள் ஆரம்பமாகி சிறிலங்கா அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு கண்டன சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் ஏ 9 பிரதான வீதிவழியாக கிளிநொச்சி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயலக சந்தியை இரு கண்டனப் பேரணிகளும் பகல் 10.30 மணிக்கு வந்தடைந்து அங்கு கிளி. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. கண்டன உரையினை கிளி. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த வேமாலிகிதன், வன்னி மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். அடுத்து வெகுசன அமைப்பின் பிரதிநிதி இரத்தின மணியினால் கண்டன அறிக்கை வாசிக்கப்பட்டு கிளி. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றிய செயலர் சு.பசுபதிப்பிள்ளை அவர்களினால் சனாதிபதிக்கான கண்டன மகஜர் கிளி. மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப்பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட கண்டனப் பேரணியானது கண்டனக் கோசங்களை எழுப்பிய வண்ணம் கிளி. மாவட்ட அரச செயலகத்தை பகல் 11.00 மணிக்கு வந்தடைந்தது அங்கு வைத்து சனாதிபதிக்கான மற்றுமொரு கண்டன மகஜரினை பூநகரி முழங்காவில் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பொ. தங்கராசா கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகனிடம் கையளித்தார் மகஜரினைப் பெற்றுக் கொண்ட மேலதிக அரச அதிபர் சனாதிபதியிடம் மகஜர் கிடைப்பதற்கான நடவடிக்கை உடன் மேற்கொள்ளபடுமெனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட கண்டனப் பேரணியானது கொளுத்தும் வெயிலினையும் பொருட்படுத்தாது ஏ-9 பிரதான வீதி வழியாக கண்டனக் கோசங்களை எழுப்பியவாறு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தை பகல் 12.00 மணிக்கு வந்தடைந்தது.

அங்கு தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கான மகஜரினை விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தை சேர்ந்த செல்வி அவர்களிடம் அக்கராயன் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ப.சபாரத்தினம் கையளித்தார்.

நேற்றைய கண்டனப் பேரணியில் அரச ,அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் பொது மக்கள், வர்த்தக சமூகத்தினர் மாதர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை மாணவர் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களினதும் கொலையைக் கண்டித்தும். விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட சமாதான செயலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்கு தலைக் கண்டித்தும் மன்னார் தாழ்வுப்பாட்டில் இளைஞர் ஒருவர் சிறிலங்கா பொலிசாரால் சித்திரவதைக்குட்பட்டதைக் கண்டித்தும். நேற்று மன்னாரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. மன்னார் பொதுமருத்துவமனை முன்பாக ஆரம்பமான இப்பேரணி பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்து அங்கிருந்து மன்னார் பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து அங்கு நிறைவுற்றது. இப்பேரணியில் பல நூற்றுக்கணக்கான மக்கள கலந்து கொண்டுள்ளதோடு சிறிலங்கா அரசுக்கெதிராகக் கோசங்களை எழுப்பித் தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தனர். அரசே உனது அட்டகாசத்தை நிறுத்து, எமது உரிமையை மதித்து நட, எம்மை அடக்கியாள உன்னால முடியாது.என்பன உள்ளிட்ட கோசங்ளை மக்கள் எழுப்பியிருந்தனர். இந்நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், விநோ நோகராதலிங்கம் மற்றும் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் கண்டன உரைகளை ஆற்றினர். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட தொழிற்சங்கங்களின் இணையம் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், மாதர் சங்கம், தமிழ் மாணவர் பேரவை தேசிய எழுச்சிப் பேரவை, மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், ஆகியவற்றால் சிறிலங்கா சனாதிபதி, சிறிலங்கா எதிர்க் கட்சித் தலைவர், சிறிலங்கா சமாதான செயலகம், விடுதலைப புலிகளின் சமாதான செயலகம், சிறிலங்காவிற்கான ஜப்பானிய சிறப்புத்தூதுவர், சிறிலங்காவிற்கான நோர்வேயின் சிறப்புத்தூதுவர், சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர், மன்னார் மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத்தல்லைவர், மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை ஆகியோருக்கான மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன. (சோ.கு)


## யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை

தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் - அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உங்கள் தொடர்புகளுக்கு: இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, தொலைநகல்: 021-2227917


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது